# கோயில் வரலாறு
# வேளாங்கண்ணி ஆரோக்கிய மாதா திருக்கோயில்

தமிழ் முதுகலைப் பட்டப் படிப்பின் ஒரு பகுதியை நிறைவு செய்யும் முகமாகப் பாரதிதாசன் பல்கலைக் கழகத்திற்கு அளிக்கப் பெற்ற திட்டக் கட்டுரை.

ம. ஜோதிகர்லின்
பதிவு எண்: P 42410711

மார்ச்சு—1986

தமிழ்த்துறை

அரசர் கல்லூரி
திருவையாறு

வீட்டுக் கட்டுரை

எம். யேசுதாசன், எம்.ஏ.,
தமிழ்த் துறைப் பேராசிரியர்,
அரசர் கல்லூரி,
திருவையாறு.

## மேற்பார்வையாளர் சான்றிதழ்

அரசர் கல்லூரி முதுகலைப் பட்ட வகுப்பு மாணவி செல்வி ம. ஜோதிகர்லின் பதிவு எண்: 42410711 என்பவர் வேளாங்கண்ணி கோயில் வரலாறு என்ற தலைப்பில் என்னுடைய மேற்பார்வையில் பாரதிதாசன் பல்கலைக் கழகத் தமிழ் முதுகலை தேர்வின் ஒரு பகுதியாகிய இத்திட்டக் கட்டுரையை 1985-86 ஆம் ஆண்டில் தாமே முயன்று ஆக்கியுள்ளார் என்பதற்குச் சான்றளிக்கிறேன்.

ம. யேசுதாசன்
9/4/1986.
மேற்பார்வையாளர் கையொப்பம்.

ம. ஜோதிகர்லின்
மாணவர் கையொப்பம்.

துறைத் தலைவர் கையொப்பம்.
9.4.86

******************************************

## கட்டுரையாளர் உறுதிமொழி

பாரதிதாசன் பல்கலைக்கழக முதுகலைப் பாடத் திட்டத்தை ஒட்டிய திட்டக் கட்டுரை தயாரிப்பில் "கோயில்" வரலாறும் ஒருவகைப் பணியாக எங்கள் கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டது. முதுகலை வகுப்பில் பயிலும் பதிவு எண். பி. 42410711 உடையேனாகிய யான் இவ்வகையில் 'வேளாங்கண்ணி கோயில் வரலாறு' என்ற தலைப்பை ஒட்டித் தகவல்களைத் தேடித் தொகுத்து கள ஆய்வு அடிப்படையில் தந்துள்ளேன்.

இத்திட்டக் கட்டுரைப் பணிக்கு மேற்பார்வையாளராக இருந்து வழிகாட்டியவர் பேராசிரியர் திரு. எம். யேசுதாசன்,எம்.ஏ., அவர்கள் இவர்தம் வழிகாட்டுதலாலும், என் சொந்த முயற்சியாலும், உழைப்பாலும் இத்திட்டக் கட்டுரை அமைந்தது என்று உறுதி கூறுகிறேன்.

ம. ஜோதி கலிலினி
மாணவர் கையொப்பம்.

ம. யேசுதாசன்
9/4/1986.
மேற்பார்வையாளரின் கையொப்பம்.

******************************************

# நன்றியுரை

"வேளாங்கண்ணி கோயில் வரலாறு" என்ற தலைப்பில் திட்டக் கட்டுரையை எழுதுவதற்கு முதற்காரணமாக இருந்த பாரதிதாசன் பல்கலைக் கழகத்திற்கு நன்றி கூறும் கடப்பாடுடையேன்.

இத்திட்டக் கட்டுரை எழுத இசைவு தந்த கல்லூரி முதல்வர் பேராசிரியர் திரு. சொ. சண்முகானந்தம், எம்.ஏ., அவர்களுக்கு மிகவும் நன்றியுடையேன்,

இத்திட்டக் கட்டுரை எழுத வழிகாட்டியாக இருந்து, இக்கட்டுரை நன்முறையில் அமையப் பேருதவி செய்த பேராசிரியர் திரு எம். யேசுதாசன், எம்.ஏ., அவர்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். நூல் கொடுத்து உதவிய தூய சிலுவை கலைக் கல்லூரி தமிழ்த் துறைப்பேராசிரியை திருமதி. ஆண்டாள் அவர்களுக்கும் மிகவும் நன்றியுடையேன். மேலும் களப்பணியில் உதவிய எஸ்.எல். கபிரியேல்-வேளாங்கண்ணி பங்குக்குரு அவர்களுக்கும், எம். குளோரிஎலிசபெத், அருள்தாஸ்-சந்தனமேரி அவர்களுக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பதிவு எண்
பி. 42410711.

## சுருக்க விளக்கம்

1. ப. பக்கம்

2. பக். பக்கங்கள்

3. மே.நூ. மேற்படி நூல்

4.

*******

# உள்ளடக்கம்


முன்னுரை

1 கோயில் உருவாகிய வரலாறு

2 கோயில் அமைப்பு

3 கோயில் அமைந்துள்ள ஊரின் சிறப்பு

4. கோயிலின் முக்கியத்துவம்.

5. திருவிழாக்களும் வழிபாடுகளும்.

6. சமூகநல அமைப்புகள்

7 முடிவுரை.

பின் இணைப்பு.

1 துணை நூற்பட்டியல்.

2 கள ஆய்வு அட்டவணை.

3. வரைபடம்

4. நிழற்படம்.


*.*.*.*.*.*.*.*

ஒ க் க ள

## முன்னுரை

பல தரப்பட்ட ஒருங்கிணைப்புக் கூடமாக கோயில்கள் இருந்து வருகின்றன. இறைவன் பொதுவாக இவ்வுலகில் உள்ள மக்களின் ஒரே பிரதிநிதியாவான். அந்த வகையில் மனித வாழ்வில் கோயிலும், அங்கு நடைபெறும் வழிபாடும் அன்றாடம் தவிர்க்க முடியாததாகிவிட்ட காரணத்தால் கோயிலைப் பற்றி ஆராய்வதென்று முடிவு செய்யப்பட்டது.

## ஆய்வுத் தலைப்பு:

கோயில் ஆராய்ச்சி செய்யும் போது ஆய்வுக்களம் பரந்தோடிக் கிடக்கின்றது. கல்லூரியில் முழுநேர மாணவியாக இருந்து கொண்டு விரிந்த பரப்பை ஆராய முடியாது என்ற காரணத்தால் வேளாங்கண்ணித் திருக்கோயில் ஆய்வுத் தலைப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. மேலும் இக்கோயிலுக்கு பலமுறை சென்று வந்த காரணத்தாலும், இக்கோயிலைப்பற்றித் திட்டக் கட்டுரை எழுத வேண்டும் என்ற ஆவலாலும், முதுகலை பட்டப் படிப்பை நிறைவு செய்யும் முகமாக ஏற்படுத்தப்பட்ட இத்திட்டக் கட்டுரைக்கு வேளாங்கண்ணி கோயிலைத் தேர்ந்தெடுத்தேன்.

இக்கோயிலைப் பற்றிய ஆய்வு, புதிய செய்திகளைத் தருவதாக அமையாமல் அங்கு உள்ளதை உள்ளவாறே விளக்குவதாக அமையும்.

## சான்றாதாரங்கள்:

களப்பணி ஆய்வாகிய இவ்வாய்விற்கு உற்று நோக்கல், பேட்டி, பட்டியல் ஆகிய முறைகளில் திரட்டப்பட்ட நேரடித் தகவல்களே முதன்மை ஆதாரங்களாகும். வேளாங்கண்ணி கோயில் பற்றி வெளிவந்துள்ள ஆராய்ச்சி நூல்களும் முதன்மை ஆதாரத்திற்கு துணையாகக் கொள்ளப்பட்டுள்ளன.

ஆய்வு முன்னுரை என்ற இவ்வியலை அடுத்துள்ள வேளாங்கண்ணி கோயில் உருவாகிய வரலாறு என்ற இயலில் திருத்தல அறிமுகம், பாரம்பரியச் செய்திகள், கோயில் தோற்றம், போர்த்துக்கீசியர் வருகை, கோயில் வளர்ச்சி ஆகிய செய்திகள் தொகுக்கப்பட்டுள்ளன.

மூன்றாவதாக அமைந்துள்ள கோயில் அமைப்பு என்ற இயலில் கோயில் அமைப்பும், அதன் கலைச் சிறப்புக்களும் தொகுத்துத் தரப்படுகின்றன. கோயில் அமைந்துள்ள ஊரின் சிறப்பு என்ற இயலின் பெயர்க் காரணம், வரலாற்றுக் குறிப்பு, ஊர் அமைப்பு, சிறப்புகள் ஆராயப்படுகின்றன.

அதனை அடுத்து அமைக்கப்பட்ட கோயில் முக்கியத்துவம் என்ற இயலில் கோயில் மக்களிடம் பெற்ற சிறப்புகள் கூறப்படுகின்றன.

வேளாங்கண்ணி கோயிலில் நடைபெற்று வருகின்ற திருவிழாக்கள், வழி பாடுகள் பற்றித் திருவிழாக்களும் வழிபாடுகளும் என்ற இயலில் ஆராயப்படுகின்றன.

வேளாங்கண்ணி கோயில் நிர்வாகத்தினரால் நடத்தப்பட்டு வருகின்ற நிறுவனங்கள், உதவிகள் பற்றிய செய்திகள் இறுதியியலில் கூறப்படுகின்றன.

ஒவ்வொரு இயலின் இறுதியிலும் மேற்கோட் செய்திகளுக்கு அடிக்குறிப்புகள் இடம் பெறுகின்றன.

பின் இணைப்புகள் துணை நூற்பட்டியல், புகைப்படங்கள், வரை-படங்கள் தரப்பட்டு ஆய்வேடு நிறைவுறுகிறது.

.......

# கோயில் உருவாகிய வரலாறு

## கோயில் உருவாகிய வரலாறு

இயேசுவின் தாயான மரியன்னை புதுமை செய்த இடங்கள் பல. அவ்வாறு புதுமை செய்த இடங்களுள் ஒன்றுதான் வேளாங்கண்ணி. இந்த தெய்வமான முருகனின் தாய் பார்வதி; மதுரை மீனாட்சி, காஞ்சி காமாட்சி, காசி விசாலாட்சி என்று அழைக்கப்படுவதைப் போல இயேசுவின் தாய் மரியன்னையும், வில்லியனூர் மாதா, பூண்டி மாதா, எலாக்குறிச்சி அடைக்கல மாதா, கோணன்குப்பம் மாதா, வேளாங்கண்ணி மாதா என்று அழைக்கப்படுவதைக் காணலாம். அவ்வாறு அழைக்கப்படுகின்ற இடங்களில் எல்லாம் மரியன்னை புதுமைகள் பல செய்ததாக கூறப்படுகிறது. அந்த இடங்களில் ஒன்றான வேளாங்கண்ணியில் இயேசுவின் தாய் மரியன்னையின் கோயில் உருவாகிய வரலாற்றை நோக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

### திருத்தல அறிமுகம்:

நாகப்பட்டினத்திலிருந்து திருவாரூர்க்குச் செல்லும் சாலையில் இருந்து தெற்கே பிரிகின்றது வேளாங்கண்ணிக்குச் செல்லும் சாலை. நாகப்பட்டினத்தில் இருந்து 10.கி.மீட்டர் தூரத்தில் வேளாங்கண்ணி அமைந்துள்ளது.[1]
வேளாங்கண்ணி ஓர் அழகிய சிற்றூர் என்றாலும் எப்பொழுதும் ஒரு நகரைப் போலவே காட்சி தருகின்றது. வேளாங்கண்ணியை கீழைநாடுகளின் லூர்து நகர் என கூறுகிறார்கள்.[2] லூர்து நகரில் பாத்திமாவிலே ஆடுமேய்க்கின்ற சிறுவர் சிறுமியர்க்கு[3] தோன்றியதுபோல் வேளாங்கண்ணியிலும் தோன்றியதால் இதனை கீழை நாடுகளின் லூர்து நகர் என வழங்குகிறார்கள். வேளாங்கண்ணியை வேளைநகர் என்றும் அழைக்கிறார்கள்.

## பாரம்பரியச் செய்திகள் :

வங்கக் கடற் ஓரம் ஒருவரும் அறியாமல் சிற்றூராக இருந்த வேளாங்கண்ணி இப்பொழுது யாவரும் அறிந்த பெருமை பெற்ற தலமாக விளங்குகிறது. மரியன்னை இந்தச் சிற்றூரிலே தோன்றியதற்குச் சான்றுகளாக கல்வெட்டுக்கள், செப்பு பட்டயங்கள் எதுவும் கிடைக்கவில்லை. வேளாங்கண்ணியில் மரியன்னை தோன்றியதற்கு ஆதாரமாக இருப்பவை எல்லாம் நாட்டுப்புற பாடல்கள், கதைகள் வழிவழியாக வழங்கி வருவது போல் வழி வழியாக மக்களுக்கு மக்கள் வழங்கி வருகின்ற பாரம்பரியச் செய்திகள் தாம். அவற்றுள் உறுதியாக கூறப்படுபவை மூன்று நிகழ்ச்சிகள்:

1. இடையர் குல சிறுவனுக்குக் காட்சி
2. மோர் விற்ற நொண்டிச் சிறுவனுக்குக் காட்சி
3. புயலில் அகப்பட்ட போர்த்துக்கீசிய கப்பல் மீண்டும் கரை சேர்ந்த நிகழ்ச்சி.[14]

இம்மூன்று நிகழ்ச்சிகளுக்கும் சான்றாக மாதா குளமும், கோயிலின் வலப்புறம் போர்த்துக்கீசியரின் கப்பலில் இருந்து எடுத்து வைக்கப்பட்ட கொடிமரத்தையும் காணலாம்.

## மாதா குளம்:

சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்பு வேளாங்கண்ணியில் அண்ணப்பிள்ளை வீதியும் அங்கு ஒரு குளமும் அதன் கரையில் ஆலமரமும் இருந்ததாகக் கூறப்படுகிறது. சிறுவன் ஒருவன் நாகையில் இருக்கும் தன் பண்ணையாருக்கு பால் கொண்டு போகும் போது அந்த ஆலமரத்தின் அடியில் அமர்ந்து இளைப்பாறியவன் அப்படியே கண்ணயர்ந்து

விட்டான். அப்பொழுது சுடர் சூழ்ந்திருக்க சுந்தர மங்கை ஒருத்தி ஒளி வீசும் குழந்தையொன்றைத் தாங்கிப் பால்காரச் சிறுவன் முன் தோன்றினார். சிறுவன் திடுக்கிட்டு எழுந்து அப்பெண்மணியையும் குழந்தையின் திருமுகத்தையும் பார்த்து திகிலும், ஆச்சரியமும் அன்பும் தோன்ற ஏது மறியாமல் கரங்களை பணிவோடு குவித்து வணங்கினான்.[5] அந்த தேவ மாது சிறுவனிடம் குழந்தைக்குப் பால் தருகிறாயா என்று கேட்க தன்னை மறந்த பால்கார சிறுவன் அத்தேவ மாதிடம் பால் செம்பை கொடுத்தான். குழந்தை பால் பருகியதை கண்ட சிறுவன் நாகப்பட்டினம் செல்ல நேரமாகிவிட்டபடியால் விரைவாக நாகை அடைந்தான். வழியில் கண்ட காட்சி அவனுக்கு மகிழ்ச்சி அளித்தாலும் பால் குறைந்திருப்பதற்கு எசமானர்க்கு என்ன பதில் சொல்வது என்று ஒரு குற்றவாளி-யைப் போல் நின்றான். நேரமானதற்கு காரணத்தை வினவி மூடியை திறப்பதற்குமுன் பாத்திரத்தில் பால் குறைந்திருக்கிறது. அதற்கு என்னை மன்-னிக்க வேண்டும் என்று மன்றாடினான்.[6] பால் குறைந்திருப்பதை பார்ப்பதற்கு மூடியைத் திறந்ததும் பால் பொங்கி வழிந்து ஓடியது. அதனைக் கண்ட எசமானரும் அக்கம் பக்கத்தில் இருந்தவர்களும் வியப்படைந்தனர். நடந்த நிகழ்ச்சியை சிறுவன் மூலம் அறிந்த எசமானர் அந்த இடத்தை தானும் பார்க்க எசமானர் விரும்பினார். சிறுவனும் எசமானரும் குளத்தங்கரைக்கு வந்தனர். அந்த சிறுவன் அன்னையை வேண்ட அன்னையும் காட்சி தந்தாள்.

இவ்வதிசய நிகழ்ச்சியும், புதுமையும், நாலா பக்கங்களிலும் பரவ இதையறிந்த கிறித்தவர்கள் தேவதாயும் மைந்தனுமே காட்சியளிக்க கருணை கொண்டனர் என்று மகிழ்ந்து அந்த குளத்திற்கு மாதா குளம் என்று பெயர் வைத்தனர். இது என்றும் வற்றாத திருக்குளமாய் பிணிகள் தீர்க்கும் பேரமுதத் தீர்த்தமாய் விளங்குகின்றது.[7]

இந்த மாதா குளம் முன்பு கிணறு போன்ற அமைப்பில் கட்டப்பட்டு கம்பி வலை போட்டு மூடியிருந்தார்கள். இப்பொழுது அக்குளத்தை மூடிவிட்டு தாமரை மலர் போன்ற வடிவில் சிறு கிணறுபோல் அமைக்கப்பட்டு கண்ணாடி கொண்டு மூடப்பட்டிருக்கிறது. கண்ணாடி வழியாகத்தான் சிறு குளத்து நீரை காணமுடியும். இரவில் பார்ப்பதற்கு உள்ளே மின்சார பல்பு பொருத்தப்பட்டிருக்கிறது. மாதா குளத்து நீரை குழாய் வழியாக பயணிகளுக்கு தருகிறார்கள். இன்றளவும் இந்த அமைப்பினை காணலாம்.

<u>கோயில் தோற்றம்</u> :

மோர் விற்கும் நொண்டிச் சிறுவனுக்கு காட்சி கொடுத்த பாரம்பரியச் செய்தியை நோக்கினால் கோயில் தோற்றம் பற்றி அறியலாம்.

வேளாங்கண்ணி கிராமத்திலே ஏழை விதவை ஒருத்திக்கு பிறவியிலேயே சப்பாணியான மகன் ஒருவன் இருந்தான். பிழைப்பிற்காக அவ்விதவை நடுத்திட்டு என்று பெயர் வழங்கி வந்த ஓர் இடத்தில் தன் மகன் சப்பாணியையும் மோர் நிறைந்த பானை ஒன்றையும் தூக்கிக் கொண்டு போய் வைத்து மோர் விற்கச் சொல்லி வந்தாள்.

நடுத்திட்டு என்ற உயரமான அந்த இடத்தில் சிலமரங்கள் அடர்ந்து உயரமாக விளங்கிற்று. அப்பக்கம் போவோர் வருவோர் அம்மரத்தடியில் இளைப்பாறி சப்பாணி சிறுவனிடம் மோர் வாங்கி குடித்து தங்கள் களைப்பை போக்கிக் கொள்வர். சப்பாணி சிறுவன் மோர் வாங்குவதற்கு யாராவது வரமாட்டார்களா என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் போது பேரொளியுடன் பெண் ஒருத்தி இறங்கி வருவதைக் கண்டான். அழகு மிகுந்த சிறுவன்

ஒருவனை ஏந்தியிருந்தாள். அந்த குழந்தைக்கு அந்த சிறுவனிடம் இருந்து மோர் வாங்கி கொடுத்தாள்.[8] மோர் விற்கும் சிறுவனின் கால் ஊனத்தைப் போக்க தன் திருமகனை நோக்கி வேண்ட திருமகனும் சிறுவனின் ஊனத்தைப் போக்கினார். உட்கார்ந்திருந்த சிறுவனோ தன் கால் குணமானதை அறிய-வில்லை. அந்த தேவமாது மோர் விற்கும் சிறுவனிடம் நாகையில் இருக்கும் கத்தோலிக்க செல்வந்தரிடம் சென்று இவ்விடத்தில் கோயில் கட்டுமாறு சொல்லும்படி கூறினாள். இதைக் கேட்ட சப்பாணி தயங்கி தன் நடக்க முடியாத கால்களையும் அந்த தாயையும் நோக்கினான். நடக்க முடியாத தான் நாகைக்குச் செல்வது எப்படி முடியும் என்று நினைத்த அவனிடம் அந்த அன்னை "எழுந்து நட" என்றாள். அப்பொழுததான் குணமானதையே உணர்ந்தான். உடனே செல்வந்தரிடம் செய்தியைக் கூற நாகைக்கு ஓடினான். அந்த செல்-வந்தரிடம் தான் கண்ட காட்சியையும், செய்தியையும் தெரிவித்து தான் கண்ட காட்சியையும் செய்தியையும் தெரிவித்து தான் குணமானதையும் கூறினான். அந்த கத்தோலிக்க செல்வந்தருக்கு முதல் நாள் இரவு தன் சுதனுடன் காட்சி தந்தி-ருந்தார்.[9] எனவே அன்னைக்கு ஆலயம் கட்டுவது பற்றி திட்டமிட்டு அன்னை காட்சி தந்த இடமான நடுத்திட்டை அடைந்து முழந்தாள் படியிட்டு வணங்கினார். ஊர் மக்கள் சப்பாணி நடப்பதைக் கண்டு வியந்தனர். பிறகு அந்த நாகை செல்வந்தர் ஊர் மக்கள் ஒத்துழைப்போடு மண்ணால் சுவரெழுப்பி கூரை வேய்ந்து சிறு கோவிலை கட்டி முடித்தார். அந்த சிறு கோயிலில் தான் கனவில் கண்டபடியே தன் திரு மைந்தனை கையில் ஏந்தியவாறு இருக்கும் சுரூபத்தை செய்து பீடத்தில் வைத்தார்.

இந்த புதுமை எப்பக்கமும் பரவ குடிசை கோவிலுக்கு மக்கள் கூட்டம்

கூட்டமாக வரத் தொடங்கினர். முதன் முதல் சப்பானிக்கு ஆரோக்கியம் தந்தாலும் அதன்பிறகு தன்னை நாடி வருவோர்க்கு ஆரோக்கியம் அளிப்பதாலும் ஆரோக்கிய மாதா எனப் பெயரிட்டு அழைத்து வந்தனர்.[10]

இவ்வாறு கூறப்படுகின்ற வழிவழியாக மக்கள் வருகின்ற பாரம்பரியச் செய்தியின் மூலம் வேளாங்கண்ணியில் கோயில் முதன்முதல் ஒரு கத்தோலிக்க செல்வந்தரால் கட்டப் பெற்றது என்பதை அறியலாம்.

போர்த்துக் கீசியர் வருகை :

போர்த்துக் கீசியர் 15-ஆம் நூற்றாண்டிலிருந்தே கடல் வழியாக கீழை நாடுகளில் வாணிபம் செய்து பெரும் பொருள் திரட்டினர்.[11] கனிவளம் காட்டுவளம் கொண்ட இந்நாட்டவர் தங்களது நாட்டின் விளை பொருட்களையும், கைவினைப் பொருட்களையும் விலைபொருளாக ஆக்க கடல் கடந்து வாணிகம் மேற் கொண்டனர்.[12] 16-17 ஆம் நூற்றாண்டுகளில் போர்த்துக்கீசிய வணிகர் ஆப்பிரிக்கா, இந்தியா, கிழக்கிந்தியத் தீவுகள், சீனா, ஜப்பான், போன்ற நாடுகளில் தங்கள் செல்வாக்கை பெருக்கி கொண்டனர்.[13]

17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சீனாவின் மக்காவ் துறை முகப் பகுதி போர்த்துக்கீசிய ஆதிக்கத்தின் கீழ் இருந்தது.[14] திரை கடலோடியும் திரவியம் தேடு" என்ற முறைக்கு ஏற்ப போர்த்துக்கீசிய வணிக மரக்கலம் மக்காவ் துறைமுகப் பகுதியிலிருந்து புறப்பட்டது. அது வங்கக் கடலில் வந்து கொண்டிருந்த போது புயல் உருவாகியது. மரக்கலம் புயல் காற்றுக்கும் அலைகளின் சீற்றத்துக்கும் இடையே தத்தளித்தது. தங்களுக்கு வந்த ஆபத்தை எண்ணி கலங்கிய மாலுமிகள் ஆபத்தில் அடைக்கலமளிக்கும் அன்னையை வேண்டினார்கள்.[15]

உடனே புயலின் சீற்றம் அடங்கியது. மாலுமிகள் மரக்கலத்தை கரையோரமாகச் செலுத்தி எல்லோரும் முழந்தாளிட்டு தேவ அன்னைக்கு நன்றி செலுத்தினர். அங்கு கத்தோலிக்க செல்வந்தரால் கட்டப் பெற்ற குடிசைக் கோவிலை கண்டனர். அக்கோவிலில் தன் மகனுடன் காட்சி தரும் அன்னையின் சுருபத்தைப் பார்த்து மகிழ்ந்து அன்னையின் கோயிலிருக்கும் இடத்தில் தாங்கள் கரை சேர்ந்தது. அன்னையின் செயல்தான் என்று அன்னைக்கு நன்றி செலுத்தினர். அந்த மாதாவுக்கு நன்றி செலுத்தும் வகையில் கட்டிடத்திற்கு வேண்டி பொருள்-களைச் சேகரித்து 24 அடி நீளமும் 12 அடி அகலமும் உள்ள ஒரு சிறு மண்டபக் கோவிலை கட்டினார்கள்.[16] அந்த புதிய ஆலய பீடத்தில் சுருபத்தை வைத்தனர். இவ்வாறு குடிசைக் கோயிலாக இருந்தது கட்டிடக் கோயிலாக மாறி வளர்ந்தது.

போர்த்துக்கீசியர் மறுமுறை வந்தபொழுது சீனாவிலிருந்து அழகான பீங்கான் ஓடுகளை கொண்டு வந்து பீடத்தை அழகு படுத்தினர். அப்பீங்கான் ஓடுகளில் விவிலியத்தின் பழைய புதிய ஆகம நிகழ்ச்சிகள் அழகாக தீட்டப்-பட்டுள்ளன. அவற்றை இன்றும் காணலாம்.[17] போர்த்துக்கீசியரின் வருகை ஒரு சிறு ஆலயம் தோன்ற காரணமாயிருந்தது.

<u>கோயில் வளர்ச்சி :</u>

மாதா செய்த புதுமைகள் நாலும் எங்கும் பரவி மாதாவின் புதுமையை தங்கள் வாழ்விலும் பெறுவதற்கு, மாதாவின் அருளைப் பெறுவதற்கு மக்கள் அதிக அதிகமாக இக்கோயிலுக்கு வரத் தொடங்கினர். மக்கள் வருகை அதிகமானபடியால் கோவிலை விரிவாகக் கட்ட வேண்டிய அவசியம்

ஏற்பட்டது. அதனால் முதலில் 24 அடி நீளம் இருந்ததை 70 அடி நீளமாகவும், 12 அடி அகலம் இருந்ததை 22 அடி அகலமுடையதாக முன் சாலை அமைக்கப்பட்டது. 1920 ஆம் ஆண்டு முன் சாலையை மேலும் விரிவாக்க 20 அடி சேர்த்துக் கட்டினர். மேலும் ஆலய முகப்பில் 82 அடிக்கு உயர்ந்த இரு கோபுரங்கள் கட்டப்பட்டது. இவற்றுக்கு கோத்திக் கோபுரங்கள் என்று பெயர் கூறுகின்றனர். 1933-ல் பீடத்தின் வலது புறமாகவும் இடதுபுறமாகவும் இரு இறக்கைச் சாலைகள் கட்டப்பட்டன. பீடத்தின் பின்புறம் திருப்பட்டு அறை கட்டப்பட்டது. பிறகு பீடத்தின் மேல் நோக்கி 92 அடிக்கு எட்டு மூலைகளைக் கொண்ட வளைவுக் கோபுரம் கட்டப்பட்டது. இவ்வாறு பல மாற்றங்கள் செய்துகோவிலைக் கட்டிய போதிலும் போர்ச்சுக்கீசியர் கோயிலை கட்டும் போது வைத்த பீங்கான் வேலைப்பாடுகள் பீடத்தின் மாற்றம் செய்யப்படாமல் அப்படியே இருந்தன. 1933 ஆம் ஆண்டு விழாவிற்கு முன் புனிதம் செய்யப்பட்டது. அதன் பிறகு ஆலயத்தின் பக்கத்தில் மாடியுடன் அமைந்த குருக்கள் இல்லம் அமைக்கப்பட்டது. தேர் நிறுத்துவதற்கு என்று ஒரு தனி இடமும் கட்டப்பட்டது. ஆலயத்தைச் சுற்றிலும் மதிலையும் கட்டினர். போர்த்துக்கீசியர் கட்டிய சிறிய ஆலயத்தை இவ்வாறு விரிவு படுத்தி அழகுற கட்டி ஆலயத்திற்கு பெருமை சேர்த்தவர் வேளாங்கண்ணியின் பங்கு தந்தை-அருள் திரு செபஸ்தியார் சேவியர் தெ நோரோஞ்ஞா ஆவார்.[18] அதன் பிறகு திரு மிக்கெல் வின்சென்ட் ரொட்ரிக்ஸ் அடிகளார் பால்காரச் சிறுவனுக்கு மாதா காட்சி தந்த இடமான மாதா குளத்தை அழகுற அமைத்தார். 1961ஆம் ஆண்டு வேளாங்கண்ணி ஆலயத்தின் நடுபீடம் வெண் சலவைக் கல்லால் புதுப்பிக்கப்பட்டது.[19]

ஆண்டுதோறும் அன்னையின் பிறப்பு விழாவின்போது வருகின்ற பயணி-களுக்கு பேராலயத்தில் இடம் போதாமல் இருந்தது. விழாக் காலங்களில்

பந்தல் போட்டு திருப்பலிகள் நிறைவேற்றினர். அதன் பிறகு ஆலயத்தின் பின்புறம் ஆலயத்தோடு இணைந்த வண்ணம் 160 அடி நீளமும் 55 அடி அகலமும் உடைய இணைப்பு பேராலயம் கட்டப்பட்டது. பின்புறம் இணைந்த பேராலயத்தில் மாடியும் அமைக்கப்பட்டது.[20] இந்த புதிய இரண்டைக் கோவிலை கட்டி முடித்தவர் மரிய ஞசை அடிகள் ஆவார். பிறகு ஆலயத்-திலிருந்து மாதா குளத்திற்குச்செல்லும் வழி நேர்வழியாக இல்லாமல் இருந்தது. அவ்வழி நேராக அமைக்கப்பட்டது. அவ்வழியின் ஒரு புறமாக இயேசுவை சிலுவையில் அறைவதற்கு முன்புமுள்முடி சூட்டியது சாட்டையால் அடிப்பது, சிலுவை சுமந்து செல்வது, சிலுவையில் அறையப்படுவது போன்ற நிகழ்ச்சிகளை இயேசுவின் பாடுகளை விளக்கும் கலை சிறப்புடன் கூடிய 14 ஸ்தலங்கள் அமைக்கப்பட்டன.

மாதா காட்சி தந்த இடத்தில் ஒரு சிற்றாலயம் கட்டப்பட்டது. அந்த ஆலயத்தில் மாதா காட்சி தந்த குளத்திற்கு அருகில் இருந்த ஆலமரம் பாது-காப்புடன் வைக்கப்பட்டது. அக்கோயிலில் மாதாவின் உருவம் சிறு பீடத்தில் வைக்கப்பட்டது. நொண்டிச் சிறுவனுக்கு காட்சி தந்த குளத்திற்கு அருகில் இருந்த ஆலமரம் பாதுகாப்புடன் வைக்கப்பட்டது. அக்கோயிலில் மாதாவின் உருவம் சிறு பீடத்தில் வைக்கப்பட்டது. நொண்டிச் சிறுவனுக்கு காட்சி தந்த நிலை ஓவியமாக வரையப்பட்டது. இப்பொழுது இஃது ஒரு அழகிய ஆலயமாக கட்டப்பட்டுள்ளது. அங்கு அன்னையின் திருவுருவம் ஒன்று புதிதாக வைக்கப்பட்டது. ஆலமரத்தை அழகுற அமைத்து போர்த்துக்கீசியர் மரக்கலம் கடலில் புயலில் தத்தளிக்கும் காட்சி தத்ரூபமாக கலை அம்சத்துடன் உருவமாக அமைக்கப்பட்டது. பேராலயத்திலிருந்து மாதா குளத்திற்குச் செல்லும் வழி

ஒழுங்காக அமைக்கப்பட்டு பாதையின் இருபுறமும் இரும்பு முள் கம்பி வேலிகள் அமைக்கப்பட்டன. இவையெல்லாம் இப்பொழுது பணியாற்றி வருகின்ற பங்கு தந்தை அருட்பெருந்திரு எஸ்.எல். கபிரியேல் அடிகளார் அவர்கள் அழகுற அமைத்தார்.

இவ்வாறு வேளாங்கண்ணியில் நடுத்திட்டு என்றவிடத்தில் நாகப்பட்டினம் கத்தோலிக்க செல்வந்தரால் குடிசைக் கோயிலாக கட்டப்பட்டு போர்த்துக்கீசியரால் கட்டிடக் கோயிலாக கட்டப்பட்ட ஆலயம் இன்று படிப்படியாக பல மாற்றங்களைப் பெற்று தஞ்சையிலுள்ள பல ஆயர்கள் குருக்கள் முயற்சியாலும் உழைப்பினாலும் அழகுற வளர்ச்சி பெற்று பேராலயமாக கிறித்தவர்களின் புனித தலங்களில் ஒன்றாக விளங்குகிறது.

## அடிக்குறிப்புகள்

1. பேரருள் திரு மோன்சிஞ்ஞோர் மோத்தாவான் அடிகள். வேளாங்கண்ணி திருத்தல வரலாறு. ஒளிநிலையம், தஞ்சாவூர் 1981, ப.1
2. மே-நூ -ப.1
3. மே.நூ -ப.4
4. மே.நூ -ப.4
5. மே.நூ -ப.5
6. மே.நூ -ப.6
7. மே.நூ -ப.7
8. மே.நூ -ப.8
9. மே.நூ -ப.9
10. மே.நூ -ப.10
11. மே.நூ -ப.10
12. மே.நூ -ப.20
13. மே.நூ -ப.21
14. மே.நூ -ப.21
15. மே.நூ -ப.11
16. மே-நூ -ப.12
17. மே.நூ -ப.12
18. மே.நூ -ப.26
19. மே.நூ -ப.27
20. மே.நூ -ப.28

-*-*-*-

கோயில் அமைப்பு

## கோயில் அமைப்பு

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"

என்பது மூதுரை, "திருக்கோயில் இல்லாத திருவிலா ஊரும்....

..................................

அவையெல்லா மூரல்ல அடவி காடே" என்கிறார் அப்பரடிகள்.[1] இவ்வாறு முக்கியமாகத் திகழ்கின்ற கோயில்கள் சிற்பக் கலையும் ஓவியமும் கட்டிடக் கலையும் உடையதாகத் திகழ்கின்றன.

தஞ்சை மாவட்டத்தில் நாகப்பட்டினத்தை அடுத்த வேளாங்கண்ணி என்ற ஊரில் பசிலிக்கா (அரச எழில் மன்றம்) என்னும் பெருமை பெற்ற ஆரோக்கிய மாதா கோயில் ஒன்று அமைந்துள்ளது. இப்பசிலிக்கா என்னும் பெருமை பெற்ற பேராலயங்கள் அரசவை மண்டபங்களைப் போல அமைந்துள்ளன. இவை கிரேக்க கட்டிடக்கலை அமைப்பை ஒட்டியவை. இப் பேராலயங்கள் அமைப்பிலும் அழகிலும் தனிச்சிறப்பு உடையவை. புராதனச் சிற்பக்கலை மரபும், பொலிவு மிகு தோற்றமும் கொண்டமைந்தவை. கிழக்குத் திசையை நோக்கிய முகப்பும் நீண்ட நீள அகலங்களும் இறுதியில் குன்று போன்ற வில் மண்டபமும் பொருந்தி அமைந்தவை.[2]

இக்கட்டிடக் கலையின் அடிப்படையில்தான் வேளாங்கண்ணி மாதா கோவிலும் அமைந்துள்ளது.

### கோயில் அமைந்துள்ள இடம் :-

இக்கோயில் கடற்கரையை நோக்கிய வண்ணம் கடற்கரைக்கு சிறிது தொலைவில் அமைந்துள்ளது. கிழக்குத் திசையை நோக்கிய வண்ணம்

கட்டப்பட்டிருக்கின்றது. கோயிலைச் சுற்றியுள்ள பகுதிகளில் தென்னந் தோப்புகளும் வயல்களும் நிறைந்து எங்கும் பசுமை நிற தோற்றத்துடன் காணப்படுகிறது.

கோயிலின் முன்புறத் தோற்றம்:

கோயிலின் முகப்பில் வலப்புறமும், இடப்புறமும் இரண்டு உயர்ந்த கோபுரங்கள் இருக்கின்றன. அவற்றின் உச்சியில் சிலுவைச் சின்னம் இருக்-கின்றது. அக்கோபுரத்தில் மாடம் போன்ற அமைப்புகள் காணப்படுகின்றன. இரண்டு கோபுரங்களின் நடுவில் மாடம் போன்ற அமைப்பில் மாதாவின் சுருபம் வைக்கப்பட்டிருக்கிறது. அதற்குக் கீழ் மாதா கையில் குழந்தை இயேசுவை ஏந்தியதைப் போன்ற அமைப்பில் கம்பிகளில் அமைத்து அவற்றில் வெள்ளை நிற வர்ணம் தீட்டப்பட்டு அழகுடன் காணப்படுகிறது. மேலும் இடப்புற கோபுரத்தின் மேல் மாடத்தில் ஆலயமணி வைக்கப்பட்டிருக்கின்றது. கோயில் முகப்பின் உச்சியில் மூன்று சிலுவைச் சின்னங்கள் காணப்படுகின்றன. இரண்டு கோபுரங்களின் நடுவில் இருக்கும் சிறு கோபுரத்தில் மின் விளக்கு பொருத்தப்-பட்டிருக்கிறது. கோயிலின் உட்புறம் செல்வதற்கு நுழை வாயிலில் படிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. முகப்பின் இரு கோபுரங்களின் கீழ்ப்பகுதியில் கோயில் கட்டியவர்கள், திறந்தவர்களின் பெயர்கள் கற்பலகையில் பொறிக்கப் பட்டுள்ளன. கோபுரங்கள் சிறந்த கலை நுட்பத்துடன் அமைந்திருக்கின்றன.

பீடத்தின் அமைப்பு:

கோயிலின் உட்புறம் சென்றதுமே மாதா சுருபத்தையும் பெரிய

பீடத்தையும் காணலாம். குழந்தை இயேசுவை இடக் கையில் ஏந்திய வண்ணமாக சுரூபம் காணப்படுகிறது. இந்த சுரூபம் கடலில் வந்ததாகக் கூறப்படுகிறது. வேளாங்கண்ணி பங்கு குரு ஒருவரின் கனவில் தோன்றி "நான் கடலில் ஒரு பெட்டியில் வருகிறேன்." என்னை புனித படுத்தி பீடத்தில் வைக்க வேண்டும் என்று கூறியதாகவும், அந்த சுரூபம் அவ்வாறு பெட்டியில் வந்த போது வேறு எவர் கைக்கும் கிடைக்காமல் பங்கு குருவுக்கு மட்டுமே கிடைத்ததாகவும், அந்த சுரூபமே இன்று பீடத்தில் வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. இடது கையில் குழந்தை இயேசுவை ஏந்திய வண்ணமாக இருக்கும் சுரூபம் ஏழு கண்ணாடி பொருத்தப்-பட்ட அறையினுள் இருப்பதாக கூறப்படுகிறது. சுரூபம் இருக்கும் பீடத்தின் இருபுறமும் கோபுரங்கள் காணப்படுகின்றன. நடுவில் கலசம் போன்ற அமைப்பும் அதன் மேல் சிலுவைச் சின்னமும் காணப்படுகிறது. சுரூபம் மஞ்சள் நிற பட்டாடையால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. மாதாவிற்கும் குழந்தை இயேசுவிற்கும் பொன்னாலான ஆபரணங்கள் அணிவிக்கப்பட்டிருக்கின்றன. மாதாவின் சிரசில் பொன்முடி சூடப்பட்டிருக்கிறது. விண்மீன்களைக் கொண்ட பொன்வளையமும், பொன்முடியோடு சேர்ந்து காணப்படுகிறது.. குழந்தை இயேசுவின் சிரசிலும் பொன்முடி சூடப்பட்டுள்ளது. மாதாவின் வலது கையில் பொன்னாலான சிலுவைக் குறியோடு கூடிய செங்கோல் காணப்படுகிறது. மாதாவின் பாதத்தில் நிலாப் பிறை அமைப்பு காணப்படுகிறது. சுரூபத்தின் வலப்புறமும், இடப்புறமும் பிளாஸ்டிக்காலான ரோஜா மலர்கள் வைக்கப்-பட்டிருப்பது அழகுடன் விளங்குகின்றன. சுரூபம் இருக்கின்ற பீடத்தின் உட்புறம் நீல நிறத்துடன் காணப்படுகிறது. இந்தசுரூபம் போர்த்துக்கீசியர் ஆலயத்தைக் கட்டியபொழுது கொண்டு வந்து வைத்தது என்று அங்கு வாழும் மக்கள் கூறுகின்றனர்.

விவிலிய நிகழ்ச்சிகளை விளக்குகின்ற வகையில் அமைந்த போர்த்துக்கீசியர் கொண்டு வந்த வைத்த பீங்கான் வேலைப்பாடுகள் பீடத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன. பீடத்தில் நற்கருணைப் பெட்டி வைக்கப்பட்டிருக்கிறது. அப்பெட்டி திரியால் மூடப்பட்டிருக்கிறது. அப்பெட்டியில் அப்பமும் திராட்சை ரசமும் வைத்திருப்பார்கள். சுரூபம் வைக்கப்பட்டிருக்கும் பீடத்தின் மேல்புறத்தில் புறா (பரிசுத்த ஆவி) பறக்கும் நிலையில் இருப்பது போல் வரையப்பட்டுள்ளது. அதற்கு மேலும் வளைவான அமைப்பில் மாதாவிற்கு தூபம் காட்டியபடி இருக்கின்ற இரண்டு சம்மனசுகளும் மாதாவை முழந்தாளிட்டு வணங்க கொண்டிருக்கின்ற இரண்டு சம்மனசுகளும் வேதத்தை வாசித்தபடியிருக்கின்ற இரண்டு சம்மனசுகளும் ஓவியமாகத் தீட்டப்பட்டிருக்கின்றன.

பீடத்தின் மேல் நோக்கி 92 அடிக்கு எட்டு மூலைகளைக் கொண்ட வளைவுக் கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது.[3] அதன் உச்சியில் சிலுவை அமைப்பு காணப்படுகிறது. இந்த வளைவுக் கோபுரத்தில் வட்ட வடிவமான எட்டு சன்னல்கள் பல நிறமான கண்ணாடிகளுடன் விளங்குகின்றன. வளைவுக் கோபுரத்தின் உட்புறத்தில் நான்கு மூலைகளிலும் சம்மனசு (தேவதூதன்) ஒன்று தன் அருகில் நிற்கின்ற குழந்தைக்கு பீடத்தில் இருக்கும் மாதாவை காட்டுவதுபோல் சித்திரம் வரையப்பட்டுள்ளது. பீடத்தின் முன்புறம் உயர்ந்த மேடை ஒன்று காணப்படுகிறது. அது சலவைக் கல்லால் கட்டப்பட்டிருக்கின்றது. அந்த மேடை மேல் இரண்டு சம்மனசுகள் மூன்று மெழுகு வர்த்திகள் வைக்கக் கூடிய விளக்கு தண்டினை கையில் பிடித்த வண்ணமாக இருக்கின்றன. இவை உலோகத்தால் ஆனவை. மேலும் தனித்தனியாக மெழுகுவர்த்திகளை ஏற்ற வைக்கக்கூடிய ஆறு விளக்குகள் இருக்கின்றன.

இவை பூஜையின் போது ஏற்றப்படுகின்றன. பூசை செய்கின்ற பலிபீடம் இந்த உயர்ந்த மேடை போன்ற அமைப்புக்கு முன் உள்ளது. அப்பலி பீடம் செவ்வகவடிவில் அமைந்துள்ளது. எப்பொழுதும் அப்பலி பீடத்தில் துணி விரிக்கப்பட்டிருக்கும். பலி பீடத்தில் பங்கு குரு பிரசங்கம் செய்வதற்கு ஒலி பெருக்கி ஒன்று வைக்கப்பட்டுள்ளது. நிருபம் வாசிப்பதற்கு என்று இடப்பக்கத்தில் மரத்தாலான புத்தக தாங்கி ஒன்று உள்ளது. பங்கு குரு பூசையின் போது அமருவதற்கு என்று இரண்டு இருக்கைகள் பலிபீடத்தின் வலப்புறம் ஒன்றும், இடப்புறம் ஒன்றும் வைக்கப்பட்டிருக்கின்றன.

பலிபீடம் அமைக்கப்பட்ட இடம் சலவைக்கற்களால் கட்டப்பட்டுள்ளது. பலி பீடத்தைச் சுற்றும் கம்பியாலான சிறிதளவு உயரமுள்ள தடுப்புச் சுவர் உள்ளது. இதில் பங்கு குரு பலி பீடத்தின் உள்ளே செல்வதற்கும், வெளியே வருவதற்கும் கதவு போன்ற அமைப்பு உள்ளது. பீடத்தின் பின்பறமாகத் திருப்பட்டு அறை உள்ளது. திருப்பட்டு அறை என்பது குருக்கள் பலி செலுத்த வருவதற்கு முன் அங்கு இருப்பர். குருக்கள் பலி செலுத்தும்போது அணியும் அங்கிகள் அவ்வறையில் இருக்கும் பலி செலுத்த தேவையான பொருட்-கள் இவ் அறையில்தான் இருக்கின்றன. இவ்அறைக்குச் செல்வதற்குப் பீடத்தின் வலப்புறமும் இடப்புறமும் வாயில்கள் இருக்கின்றன. இவ்வாயில்கள் திரைச் சீலையால் மூடப்பட்டிருக்கும். மாதாவிற்கு பக்தர்கள் கொண்டு வரும் மாலைகளைச் செலுத்துவதற்கு பீடத்தின் வலப்புறமும், இடப்புறமும் படிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அங்கு பணிபுரிபவர்கள் அப்படிகளில் ஏறிச் சென்று மாலைகளை செலுத்துகின்றனர். கோயிலுக்கு வரும் பக்தர்கள் தாங்கள் கொண்டு வந்த பொருள்களை மாதாவின் பாதத்தில் வைத்து எடுத்துச் செல்ல

விரும்புகின்றனர். மஞ்சள், சுருபம், மாலை, பேனா போன்ற தங்களுக்கு தேவையான முக்கியமான பொருள்களை மாதாவின் பாதத்தில் வைத்து எடுப்பர். அவ்வாறு பக்தர்கள் கொண்டு வரும் பொருள்களை அங்கும் பணி புரிபவர் ஒருவர் மாதாவின் பாதத்தில் வைத்து எடுத்துத் தருவார். மாதாவிற்கு செலுத்தப்பட்ட மாலைகளை பக்தர்களுக்கே நறுக்கித் தந்து விடுகின்றனர். இவ்வாறு கோயிலின் பீடமும், பலி பீடமும் அமைந்திருக்கின்றன.

**கோயிலின் உட்புறத் தோற்றம்:**

கோயில் பரிசுத்த ஆவியின் வடிவமான புறா பறக்கும் நிலையில் இருப்பது போன்ற அமைப்புடன் காணப்படுகின்றது. பீடத்தின் முன்புறம் நீண்ட அமைப்புடைய சாலையும், பீடத்தின் வலப்புறம் ஒரு சாலையும், இடப்புறம் ஒரு சாலையும் உள்ளது. இவற்றை இறக்கைச் சாலைகள் என்கின்றனர்.[4]

**முன் சாலை அமைப்பு:**

கோயிலின் முன் சாலை சலவைக் கற்களால் ஆனது. கோயில் முன்புறம் பெரிய நுழைவு வாயிலை ஒட்டிய உட்புற சுவரில் வலப்புறம் ஒரு தீர்த்தத் தொட்டியும் இடப்புறம் ஒரு தீர்த்தத் தொட்டியும் உள்ளது. அந்த சுவரை ஒட்டிய வலப்புற மூலையில் ஒரு சிறு அறை உள்ளது. அங்கு மாதாவிற்கு செலுத்தப்பட்ட மாலைகளை நறுக்கி பக்தர்களுக்கு தருகின்றனர். நுழை வாயிலின் உள்ளே சென்றதும் பக்தர்களின் வசதிக்காக இருக்கைகள் போடப் பட்டிருக்கின்றன. முன் சாலையின் வலப்பக்கத்தில் மூன்று வாயில்களும் ஏழு

வாயில்களும் அமைக்கப்பட்டுள்ளன. வலப்பக்கத்து நடுவாயிலின் அருகில் தீர்த்தத் தொட்டி சுவரை ஒட்டி வைக்கப்பட்டுள்ளது. அதே போல் இடப்புறத்திலும் மூன்று வாயில்களும், ஏழு மாடங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இருபக்கத்து நடுவாயில் சுவரை ஒட்டி தீர்த்தத் தொட்டி வைக்கப்பட்டுள்ளது. முன் சாலையின் வலப்புறத்திலும் இடப்புறத்திலும் சிலுவைப் பாடுகளை விளக்குகின்ற சிற்பங்கள் காணப்படுகின்றன. மேற்கு பக்க முதல் வாயிலின் அருகில் கம்பியாலான சிறிதளவு உயரமுடைய தடுப்புச் சுவர் காணப்படுகின்றது. அந்தத் தடுப்புச் சுவரின் நடுவில் இடைவெளி இருக்கின்றது. வலப்புற சுவருக்கு அருகில் விண்ணப்ப பெட்டி ஒன்றும் காணிக்கை பெட்டி ஒன்றும் வைக்கப்பட்டுள்ளது. இடப்புறத்தில் பித்தளையால் செய்யப்பட்ட விளக்கு தண்டுகள் மெழுகுவர்த்தி பக்தர்கள் ஏற்றிவைப்பதற்கென்று வைக்கப்பட்டிருக்கின்றன. மெழுகுவர்த்தி வாங்கி ஏற்றி வைப்பவர்கள் இதில் வைப்பார்கள். அதற்கு அருகிலேயே ஆள் உயர அளவுள்ள பித்தளை குத்து விளக்கு அடுக்கடுக்கான அமைப்பை உடையது. எண்ணெய் விளக்கு, நெய்விளக்கு ஏற்றுகிறேன் என்று வேண்டிக் கொண்டு குத்து விளக்கில் நெய், எண்ணெய் இவற்றை ஊற்றுகின்றார்கள். அதற்குப் பக்கத்தில் மெழுகுவர்த்தி ஏற்றி வைக்கும் விளக்கு தண்டில் மெழுகுவர்த்தி ஏற்றி வைக்கின்றார்கள். கோயில் நுழைவாயிலின் உட்புறம் மேல்தளம் அமைக்கப்பட்டுள்ளது. அங்கு இருந்து பூசையின் போது பாடுகின்றார்கள். கோயில் உட்புற மேற் கூரையில் ஒன்பது வளைவுகள் காணப்படுகின்றன. அலங்கார விளக்குகள் பல இடப்புறச் சுவரிலும் மின் விசிறிகள் பொருத்தப்பட்டிருக்கின்றன.

<u>வலப்புறச் சாலை அமைப்பு :</u>

கோயிலின் வட திசையிலிருந்து உள்ளே வருவதற்கு மூன்று நுழைவாயில்கள் இருக்கின்றன. நடுவில் இருப்பது பெரியதாகவும், மற்ற இரண்டு பக்கத்திலிப்பதும்

சிறியதாகவும், இருக்கின்றன. கோயிலின் உள்ளேயிருந்து மேற்குப் பக்கமும், கிழக்குப் பக்கமும் செல்வதற்கு மேற்கு திசையில் இரண்டு வாயிற்படியும், கிழக்குத் திசையில் இரண்டு வாயிற்படியும் இருக்கின்றன. இரண்டு பக்க சுவரிலும் நான்கு நான்கு மாடங்கள் இருக்கின்றன. மேற்புறத்தில் தென் புறம் இருக்கும வாயிலின் அருகில் மரத்தால் செய்யப்பட்ட கோபுரம் போன்ற அமைப்பை உடைய பீடம் ஒன்று வைக்கப்பட்டிருக்கின்றது. அதில் மூன்று அறைகள் இருக்கின்றன. நடுவில் இருக்கும் அறையில் இயேசுவின் முழு உருவ சுருபம் வைக்கப்ப்ட்டிருக்கின்றது. வலப்பக்கம் இயேசுவின் தந்தை சூசையப்பரின் முழு உருவ சுருபமும், இடப்பக்கம் இயேசுவின் தாய் மரியாளின் சுருபமும் வைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு வலப்புறச் சாலை அமைப்பு இருக்கின்றது.

<u>இடப்புறச் சாலை அமைப்பு:</u>

வலப்புறச் சாலை அமைப்பை போலவே இடப்புறச் சாலையிலும் மேற்குப் பக்கத்தில் இரண்டு வாயில்களும், நான்கு மாடங்களும், கிழக்குப் பக்கத்தில் இரண்டு வாயில்களும் நான்கு மாடங்களும் இருக்கின்றன. தென் திசையிலிருந்து கோயிலின் உட்புறம் வருவதற்கு மூன்று வாயில்கள் இருக்கின்றன. நடுவில் பெரிய வாயிலும், இரண்டு பக்கத்திலும் சிறிய வாயில்களும் இருக்கின்றன. கோயிலின் உட்புறம் வருவதற்கு படிக்கட்டு அமைப்புகள் இருக்கின்றன. மேற்புறத்தில் வலப்பக்கம் இருக்கும் வாயிலின் அருகில் மரத்தால் செய்யப்பட்ட பீடம் இருக்கின்றது. அதில் நடுவில் கார் மேல் மாதாவும், இருபுறமும் மாதாவின் பெற்றோர்களான அன்னம்மாள், சொர்க்கின் இருவரினி சுருபங்கள் இருக்கின்றன. இடப்புறச் சாலையிலும் மின்விசிறி அமைப்பு அலங்கார விளக்குகளும் இருக்கின்றன. இவ்வாறு இடப்புறச் சாலை அமைப்பு இருக்கின்றன. இவ்வாறு கோயில் மேற்கூரை சிவப்பு வண்ணத்தில் இருக்கிறது.

**பின்புறம் இணைக்கப்பட்ட கோயிலின் அமைப்பு:**

இக்கோயில் மேற்கு திசையை நோக்கிய வண்ணம் இருக்கின்றது. பின்புறம் இணைக்கப்பட்ட கோயிலின் பகுதியும் இறக்கைச் சாலை அமைப்பிலேயே இருக்கிறது. பீடத்தில் இயேசுநாதர் சிலுவையில் அறையப்பட்ட காட்சியில் அமைந்த பெரிய சுரூபம் வைக்கப்பட்டிருக்கிறது. அதன்முன் பலிபீடம் சலவைக்கல்லால் அமைக்கப்பட்டிருக்கிறது. பீடத்தைச் சுற்றி இரும்பாலான சிறிதளவு உயரமுள்ள தடுப்புச் சுவர் உள்ளது. பீடத்தின் பின்புறம் திருப்பட்டு அறை உள்ளது. இவ் திருப்பட்டு அறையில் இருந்து முன்புறக் கோயிலுக்கும் பின்புறக் கோயிலுக்கும் மேல் தளத்தில் உள்ள கோயிலுக்கும் செல்லலாம். வலப்புற இறக்கைச் சாலையில் இயேசுநாதர் முழு உருவ சுரூபம் வைக்கப்பட்டிருக்கிறது. அதன்கீழ் திவ்ய நற்கருணைப் பெட்டி வைக்கப்பட்டிருக்கிறது. அதன் இருபுறமும் மெழுகுவர்த்தி ஏற்றி வைக்கும் விளக்குத் தண்டுகளும், பூசாடிகளும் இருக்கின்றன. இடப் புற இறக்கைச் சாலையில் முன்புறக் கோயிலில் பீடத்தில் கையில் குழந்தை இயேசுவை ஏந்திய வண்ணம் இருக்கும் மாதா சுரூபம் போலவே இங்கும் கையில் குழந்தை இயேசுவை ஏந்திய வண்ணம் இருக்கின்ற மாதாவின் சுரூபம் காணப்படுகிறது. அதன் கீழ் மெழுகுவர்த்தி ஏற்றி வைக்கும் விளக்குத்தண்டும் சாடிகளும் இருக்கின்றன.

பின்புறக் கோபுரயிலின் நுழைவாயிலில் மூன்று வாயிற்படிகள் இருக்கின்றன. நடுவில் இருக்கும் வாயிற்படியின் உட்புறம் மேற்புறத்தில் இயேசுநாதர் தம் சீடர்களுக்கு அப்பமும் திராட்சை ரசமும் கொடுக்கும் காட்சி படமாக

இருக்கிறது. நுழைவாயிலின் வலப்புறத்தில் ஒர் அறை இருக்கிறது. அங்கு போனால் இயேசுநாதருக்கு திரு முழுக்குக் கொடுப்பது போன்ற சிலை இருக்கிறது. கோயிலின் வலப்புறம் தென்திசையிலிருந்து உட்புறம் வருவதற்கு மூன்று நுழைவாயில்களும் கோயிலின் இடப்புறத்தில் வடதிசையிலிருந்து உள்ளே வருவதற்கு மூன்று நுழைவாயில்களும் இருக்கின்றன. கோயிலின் வலப்புறத்தில் பாவ சங்கீர்த்தனம் செய்வதற்கு என்று ஆறு இருக்கைகள் இருக்கின்றன. கோயிலின் வலப்புறமும் இடப்புறமும் சலவைக்கல்லால் ஆன ஒன்பது ஒன்பது தூண்கள் இருக்கின்றன. பக்தர்கள் அமர்வதற்கு இருக்கைகள் போடப்பட்டிருக்கின்றன. காற்று உள்ளே வருவதற்கு சன்னல்கள் இருக்கின்றன.

வலப்புற இருக்கைச் சாலையில் கிழக்குத் திசையில் இருந்து உள்ளே வருவதற்கு இடப்புறத்தில் ஒரு நுழைவாயிலும், தென் திசையிலிருந்து உட்புறம் வருவதற்கு மூன்று நுழைவாயில்களும் இருக்கின்றன. இடப்புற இருக்கைச் சாலையும் வலப்புற இருக்கைச் சாலை போலவே அமைந்துள்ளது. இம்முறையில் பின்புறக் கோயில் அமைந்துள்ளது.

<u>மேல் தள கோயில் அமைப்பு :</u>

கோயிலின் மேல் தளத்திற்கு செல்வதற்குப் படிபோன்ற அமைப்பு இல்லாமல் ஏறுவதற்கு வசதியாக சரிவான பாதை அமைக்கப்பட்டிருக்கின்றது. கோயிலுக்குச் செல்பவர்களுக்கு ஒரு வழியும் கோயிலில் இருந்து வெளியே வருவதற்கு ஒரு வழியும் அமைக்கப்பட்டிருக்கின்றது. பாதையின் இரு பக்கமும் பாதுகாப்பான சிறிய சுவர் அமைப்பு உள்ளது. மேல்தளக் கோயிலின் முன்புறம் இரண்டு உயர்ந்த கோபுரங்கள் காணப்படுகின்றன. அதன் உச்சியில் சிலுவைச் சின்னம் காணப்படுகிறது. இரண்டு கோபுரங்களிலும் மாடம் போன்ற

அமைப்பு காணப்படுகிறது. இரண்டு கோபுரங்களின் நடுவில் முக்கோணம் போன்ற அமைப்பு இருக்கின்றது. அதில் மாதாவின் சுரூபம் காணப்படுகிறது. வலது புறக் கோபுரத்தில் ஆலய மணி வைக்கப்பட்டிருக்கிறது. இந்த நடிகர் சிவாஜி கணேசன் அவர்களால் அளிக்கப்பட்டதாகும்.[5] கோயிலின் உட்புறம் செல்வதற்கு மூன்று நுழைவாயில்கள் இருக்கின்றன. உட்புறம் செல்வதற்கு சென்றவுடன் நடுவில் இருக்கும் நுழைவாயிலின் உட்புறம் மேல் பகுதியில் இயேசு ஆட்டுக் குட்டிகளுடன் இருக்கும் காட்சி சித்திரமாக உள்ளது. பீடத்தில் இயேசு சிலுவையில் அறையப்பட்டு இருக்கும் சுரூபம் இருக்கின்றது. பீடத்தின் பின்புற சுவரில் வெண்மேகங்களோடு கூடிய ஆகாயத்தில் சம்மனசுகள் தோன்றும் காட்சி சித்திரமாக வரையப்பட்டுள்ளன. அச்சித்திரத்தில் எட்டு சம்மனசுகள் இருக்கின்றன. பலி பீடம் சலவைக் கல்லால்கட்டப்பட்டிருக்கின்றது. பலி பீடத்தைச் சுற்றிலும் இரும்புக் கம்பியாலான கதவு போடப்பட்டிருகிறது. அதில் பங்குக் குரு பலி பீடத்தை விட்டு வெளியே வருவதற்கு. உள்ளே செல்வதற்கு திறந்து மூடும் அமைப்பு உடைய கதவு ஒன்று இருக்கிறது. கோயிலின் நுழைவு வாயிலிலிருந்து பலி பீடம் வரை நடுவில் கம்பளம் விரிக்கப்பட்டிருக்கின்றது. கோயிலின் இடப்புறத்தில் இருக்கைகள் போடப்பட்டிருக்கின்றன. வலது புறத்தில் பாவ சங்கீர்த்தனம் செய்யும் இருக்கைகள் ஆறு இருக்கின்றன. கோயில் மேற்கூரையில் வலது பக்கத்திலும், இடது பக்கத்திலும் காற்றறைகள் இருக்கின்றன. கோயில் முன் சாலையின் இடது புறத்திலும், வலதுபுறத்திலும் சலவைக் கல்லால் ஆசனங்கள் இருக்கின்றன. வலப்புறச் சுவரிலும் இடப்புறச் சுவரிலும் சன்னல்கள் இருக்கின்றன. பிரசங்கம் நடக்கும்போது பிரசங்கத்தை அனைவரும் கேட்பதற்கு எட்டு ஒலி பெருக்கி பெட்டிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. கோயிலின் மேற்புறத்திலும் இறக்கைச் சாலை அமைப்பு இருக்கிறது. வலதுபுற இறக்கைச் சாலையில் இயேசுநாதரின் *சுரூபம் வைக்கப்பட்டிருக்கிறது.

இறக்கைச் சாலைகளிலும் சன்னல் அமைப்பு, மின் விசிறி அமைப்பு, அலங்கார விளக்குகளும் இருக்கின்றன. பீடத்தின் வலப்புறத்தில் கோயிலின் மேற் பகுதியிலிருந்து கீழ்ப்பகுதியிலிருக்கும் திருப்பட்டு அறைக்குச் செல்ல படிகள் இருக்கின்றன. இம்முறையில் மேல் தளத்தில் இருக்கும் கோயில் அமைந்துள்ளது.

கோயிலோடு இணைந்த வண்ணம் ஒரு சுற்றுச் சுவர் உள்ளது. அடுத்து கோயிலைச் சுற்றி வருவதற்கு அகலமான இடப்பரப்பு விட்டு இரண்டாவது சுற்றுச் சுவர் உள்ளது. கோயிலைச் சுற்றியுள்ள தலம் சிமெண்ட் போடப்பட்டது. கோயிலின் பின்புறச் சுவரிலிருந்து மாதா காட்சி கொடுத்த இடத்திற்குச் செல்ல வழி இருக்கின்றது. சுற்றுச் சுவரைச் சுற்றிலும் மின் விளக்கு அமைப்புகள் இருக்கின்றன. இம்முறையில் முன்புறத்தில் இருக்கும் கோயில், பின்புறம் உள்ள கோயில் மேல்தளத்தில் உள்ள கோயில் அமைப்புகள் இருக்கின்றன.

## மாதா காட்சி கொடுத்த இடத்தின் கோயில் அமைப்பு :

மாதா காட்சி கொடுத்த இடத்தின் கோயிலுக்கு செல்லும் வழியில் இரண்டு புறமும் இயேசுவை பிலாத்து கைகழுவுவது, இயேசுவின் தலையில் முள்முடி சூட்டுவது, சிலுவை சுமந்து செல்லும் போது கீழே விழுவது, சிலுவையில் அறைப்படுவது, அடக்கம் செய்யப்படுவது, உயிர்த்து எழுதல், சீடர்கள் பரிசுத்த ஆவி பெறுதல், மாதாவிற்கு முடி சூட்டுதல் போன்ற நிகழ்ச்சிகளை விளக்கும் சிற்பங்கள் பதினைந்து

மாடங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. கிறிஸ்தவர்கள் பழைய மாதா கோவிலுக்கு செல்லும்போது சிலுவைப் பாதை செய்வதற்கும் வரும்போது செப மாலை செய்து கொண்டு வருவதற்கும் வசதியாக இம்மாடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இரண்டு புறமும் கருங்கல் தளங்கள் போடப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு மாடத்திலும் மின் விளக்கு அமைப்பு இருக்கின்றது. இம்மாடங்கள் கண்ணாடியால் மூடப்பட்டிருக்கின்றன. பழைய மாதா கோயில் கிழக்கு திசையை நோக்கிய வண்ணம் இருக்கின்றது. கோயில் அரைவட்ட அமைப்பில் கட்டப்பட்டிருக்கின்றது. கோயிலின் அமைப்பிலேயே கோயில் உட்புறம் செல்ல படிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கோயில் மேற்கரை முன்புறக் கோயிலின் வளைவுக் கோபுரம் போலவே இங்கும் வளைவுக் கோபுரம் உள்ளது. அதற்கு முன்புறம் பச்சை நிறக் கண்ணாடியால் அமைக்கப்பட்ட ஒன்பது மாடங்கள் காணப்படுகின்றன. கோயில் முன்புறம் ஒரு நுழைவாயில் உள்ளது. அந்த நுழைவாயிலின் கதவு நுணுக்கமான வேலைப்பாடுடன் அமைந்திருக்கிறது. அதில் பத்தனை பூண் அமைப்பு இருக்கின்றது. கோயில் கதவு மூடியிருக்கும்போது கோயில் உள்ளேயிருக்கும் மாதாவை தரிசித்துச் செல்வதற்கு வட்டமான சன்னல் அமைப்புகள் மூன்று இருக்கின்றன.

கோயிலின் உள்ளே பேர்ர்த்துக்கீசியர் கப்பல் புயலில் சிக்குண்டு இருக்கும் காட்சியும், அக்கப்பலில் இரண்டு மாலுமிகள் உருவமும் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளன. அம்மாலுமிகள் கொடி மரத்தின் கயிற்றினை பிடித்த வண்ணம் இருக்கும் காட்சி அமைக்கப்பட்டிருக்கின்றன. அக்கப்பலின் மேற்புறத்தில் மாதா குழந்தை இயேசுவை கையல் ஏந்தியபடி இருக்கின்ற சுரூபம் அமைக்கப்பட்டிருக்கிறது. கடலில் அலைகள் பொங்கி வரும் காட்சி அமைக்கப்-

பட்டிருப்பது தத்ரூபமாக இருக்கின்றது. கோயில் உட்புறத்தில் அமைக்கப்பட்டிருக்கின்ற மேடையில் சிற்பங்கள் காணப்படுகின்றன. கப்பலின் வலது புறத்தில் பால்காரச் சிறுவன் கையில் பொங்கி வழிகின்ற பால் செம்புடன் நிற்கும் படியான சிற்பம் உள்ளது. இடது புறம் மோர்விற்கும்சப்பாணிச் சிறுவன் அமர்ந்திருக்கும் படியான சிற்பம் உள்ளது. அச்சிற்பத்திற்கு அருகில் மாதா முதல் முதல் காட்சி கொடுத்ததற்கு அடையாளமான ஆலமரம் ஒன்றினைக் காணலாம். அந்த ஆலமரத்தில் இலைகளும், பழங்களும், ஆல விழுதுகளும் அமைக்கப்பட்டிருப்பது உண்மையான ஆலமரமோ என்று எண்ணத் தோன்றுகிறது. மணல் பரப்பு புல்வெளிகள் சோலை போன்று தத்ரூபமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. இஃது ஒரு சிறிய கோயிலே. இக்கோயிலின் முன்புறம் மாதா காட்சி கொடுத்த குளத்து நீர் கான்க்ரீட்டினால் பாதுகாப்பாக மூடப்பட்டுள்ளது. அக்குளத்து நீரை தாமரை மலர் போன்று கட்டப்பட்டுள்ள அமைப்பின் வழியே பார்க்க முடியும். தாமரை மலரின் மேற்புறம் கண்ணாடியால் மூடப்பட்டிருக்கிறது. அதன் உட்புறத்தில் இரவில் குளத்து நீரை பார்ப்பதற்கென்று மின்விளக்கு பொருத்தப்பட்டுள்ளது. கோயிலின் வலப்புறத்தில் ஒரு கட்டிடம் இருக்கின்றது. அக்கட்டிடத்தில் தீர்த்த நீர் வாங்குவதற்கென்று பாட்டில்கள், டப்பாக்கள், விற்கப்படுகின்றன. மேலும் மாதா டாலர்களும், மோதிரங்களும் மாதா பாட்டுப் புத்தகங்களும் விற்கப்படுகின்றன. இடப்புறத்தில் மணிக் கூண்டு கட்டப்பட்டிருக்கின்றது. அதன் மேல் உயர்ந்த கோபுரம் [illegible] ஒன்று கட்டப்பட்டிருக்கின்றது. அதன் உச்சியில் சிலுவைச் சின்னம் அமைக்கப்பட்டுள்ளது. இரண்டு மாடங்கள் அதில் காணப்படுகின்றன. கீழ்ப்புறம் உள்ள மாடத்தில் ஆரோக்கிய மாதாவின் சுரூபம் ஒன்று வைக்கப்பட்டுள்ளது. அதற்மேல் மாடத்தில் ஆலயமணி இருக்கின்றது.

இதற்குப் பக்கத்தில் சிறிது பின்புறத்தில் மாதா குளத்து நீரை மோட்டார் மூலமாக வந்து, வரும் மக்களுக்கு குடிப்பதற்கும், தீர்த்தம் பாட்டில்களில் எடுத்து செல்வதற்கு கொடுக்கும் ஒரு கட்டிடப் பகுதி இருக்கிறது. அந்த தீர்த்தத்தை கை கழுவவோ, கீழே ஊற்றவோ கூடாது. இடப்புறத்தில் சிறிது தூரத்தில் பொது கழிவறைகள் கட்டப்பட்டிருக்கின்றன. கோயிலுக்கு முன்பக்கத்தில் மின் விளக்கு அமைப்புகள் இருக்கின்றன. இவ்வாறு மாதா முதல் முதல் காட்சி கொடுத்த கோயிலின் அமைப்புகள் இருக்கின்றன.

பெரிய மாதா கோயிலில் இருந்து பழைய கோயிலுக்குச் செல்லும் வழியில்இருபுறமும் வெளிமக்கள் ஆக்ரமித்து கொள்ளாதவாறு தடுப்புச் சுவர்களும் முள்வேலிகளும் போடப்பட்டிருக்கின்றன. 70 அடி நீளமும் 22 அடி அகலமும் உள்ள முன் சாலை 1920 ஆம் ஆண்டு மேலும் 20 அடி சேர்ப்பிக்கப்பட்டது. கோயிலின் முகப்பிலுள்ள இரண்டு கோத்திக் கோபுரங்களும் அப்பொழுது கட்டப்பட்டன. அக்கோபுரத்தின் அளவு எண்பத்தி இரண்டு அடிகள். 1933 ஆம் ஆண்டு பீடத்தின் வலதுபுறமும் இடதுபுறமும் இரு இறக்கைச் சாலைகளும் பீடத்தின் பின்புறமாகத் திருப்பட்டு அறையும், பீடத்தின் மேல் நோக்கி எட்டு மூலைகளைக் கொண்ட வளைவுக் கோபுரமும் கட்டப்பட்டது. அன்னையின் விழாவுக்கு முன் ஆலயம் புனிதம் செய்யப்பட்டது. இவ்வாறு ஆலயத்தை விரிவு படுத்தி அழகுறக் கட்டியவர் வேளாங்கண்ணியின் பங்குத் தந்தையான அருள் திரு செபஸ்தியார் சேவியர் தெ நொரோஞ்ஞா ஆவார். ஆலயத்தைச் சுற்றியுள்ள எழில்மிகு மதிலையும் இவரே கட்டினார். 1942 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 21ஆம் நாள் தான் விண்ணகம் சேர்ந்தார். இவருடைய உடல் ஆலய முகப்பில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

1942 ஆம் ஆண்டு முதல் 1963 ஆம் ஆண்டு வரை வேளாங்கண்ணி பங்குத் தந்தையாகப் பணியாற்றிய அருள் திரு மிக்கேல் வின்சென்ட் றொட்ரிக்ஸ் அடிகளார் பால்காரச் சிறுவனுக்கு மாதா காட்சி தந்த இடமான மாதா குளத்தை அழகுற அமைத்தார். ஆலயத்திலிருந்து குளத்திற்குச் செல்லும் வழியையும் உருவாக்கினார். கோயிலைச் சேர்ந்து அமைந்துள்ள இணைப்பு பேராலயங்களை 1963-இல் இருந்து 1980 வரை பங்கு தந்தையாகப் பணிபுரிந்த அருள் திரு மரிய ஜோசை அடிகள் கட்டினார்.[6]

மாதா குளத்தில் மணிக் கூண்டும், திருநீர்த்தொட்டியும் மாதா குளத்திற்குச் செல்லும் வழியில் பதினைந்த மாடங்களும் மாதா குளத்தில் சிற்றாலயமும் மோன்-தாமஸ்வாஸ் அடிகளால் கட்டப்பட்டது. கோயிலுக்கு எதிர்ப்புறம் அமைந்துள்ள வியாகுல அன்னை கோயிலுக்கு காங்கிரீட்டினால் தளம் அமைத்து. மாதா காட்சி தந்த மாதா குளம் என்னுமிடத்தில் அழகிய சிற்றாலயம் அமைத்தவர் பங்குத் தந்தை எஸ்.எல். கபிரியேல் அடிகளார் ஆவார்.

போர்த்துக்கீசியர் கட்டிய 24 அடி நீளமும் 12 அடி அகலமும் கொண்ட கோயில் இன்று வளர்ச்சி பெற்று அழகிய ஒரு அரச எழில் மன்றமாக திகழ்கிறது.

- - -

## அடிக்குறிப்புகள்

1. அப்பர் திரு. 6 தனித் திருத்தாண்டகம் -பாடல்-33 பக்கம்-99 தருமை ஆதீன பதிப்பு.

2. பேரருள் திரு மோன்சிஞ்ஞோர் மோத்தாவாள் அடிகள்-வேளாங்கண்ணி திருத்தல வரலாறு-ஒளிநிலையம்-தஞ்சாவூர்-1981-ப-30

3. மே.நூ.ப-26

4. மே.நூ.ப-26

5. நேரில் கேட்டறிந்த செய்தி

6. பேரருள் திரு மோன்சிஞ்ஞோர் மோத்தாவாள் அடிகள் ஒளிநிலையம் தஞ்சாவூர்-1981-ப.26.

- * - * - * -

## கோயில் அமைந்துள்ள *** ஊரின் சிறப்பு

## கோயில் அமைந்துள்ள ஊரின் சிறப்பு

ஒருபுறம் வங்கக் கடலின் நீல விளிம்புகள், மறுபுறம் வெள்ளையாறு கடலோடு கலக்கும் காட்சி, கம்பீரமாய் உயர்ந்து நிற்கும் ஆரோக்கிய அன்னையின் பேராலயக் கோபுரங்கள் ஆண்டாண்டுகளாய் அந்த அன்னை காட்சி தந்த வரலாற்றுத் தடயங்கள், வாழ்வின் வைப்புக்கள் இவையெல்லாம் சேர்ந்தமைந்த இடம்தான் வேளாங்கண்ணி

"பாரினில் உள்ள பல பேரோங்கும் ஊர்களில்
பாக்ய மிக சிலாக்யம் நிறை வேளாங்கண்ணி"

எனப்பாடினார் இசைக் கவிஞர் சந்தியாகு சுவாமிகள்.[1]

"வேளை நகரென்று சொன்னாலே-அன்ப
வேதனை நீங்கிடும் தன்னாலே
நாளும் அருள் கன்னித் தயாபரலே-என்றும்
நன்மை சொலப்போமோ வாயாலே" -

என்று பாடுகின்றார் புலவர் தாமஸ்.[2]

**பெயர்க் காரணம்:**

வேளாளக்கண்ணி ~~வேளாங்கண்ணி~~ - வேளாள மரபினர் வாழ்ந்த இடமாகையால் இது வேளாங்கண்ணி என அழைக்கப்படுவதாக அறிஞர்கள் விளக்கம் தருவர். வேளாங்கண்ணி என்பது காரணப் பெயர். வேளாளர் என்பார் விருந்திருக்க உண்ணாதார் என்பது போல (வேளாண்மை என்றால் உபகாரம்

என்பது உரிய பொருள் உபகாரமாம் கன்னி மரியன்னை கோவில் கொண்டு வரங்களை வாரி வழங்கும் ஊர் வேளாங்கண்ணி என்றும் நாம் கொள்ளலாம்.[3]

## வரலாற்றுக் குறிப்பு:

வேளாங்கண்ணி ஒரு காலத்தில் சிறந்த துறைமுகமாக விளங்கியதற்கான சான்றுகள் உள்ளன. உரோமை கிரீஸ் (யவனம்) முதலிய மேலை நாடுகளுக்குப் பொருள்களை ஏற்றி இறக்கும் வாணிகத் தலமாக இதன் அமைதியான ஆனால் ஆழமான கடலோரப் பகுதி அமைந்திருந்தது என வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன.[4]

## வேளாங்கண்ணிக்குச் செல்லும் வழிகள்:

நாகையிலிருந்து திருத்துறைப் பூண்டி செல்லும் சாலையில் வேளாங்கண்ணி கிளைப் பாதையைக் காட்டும் வழிகாட்டும் நுழைவாயில் அமைந்துள்ளது. திருத்துறைப் பூண்டியிலிருந்து பேருந்துகளில் வேளாங்கண்ணி வந்து சேரலாம். கேரளா, கர்நாடகம், முதலிய மாநிலங்களிலிருந்தும் வேளாங்கண்ணிக்குப் பேருந்துகள் வருகின்றன.[5]

நாகப்பட்டினத்திலிருந்து திருத்துறைப் பூண்டிப்பட்டுக்கோட்டை, வேதாரணியம் போன்ற ஊர்களுக்குப் போகும் பேருந்துகள் அனைத்தும் ஆரோக்கிய மாதா ஆலயத்தின் முன்பு வரை சென்றே திரும்புகின்றன. வேளாங்கண்ணிக்கு நகரப் பேருந்துகளும் தொலைப் பேருந்துகளும் சென்ற வண்ணம் உள்ளன. வாடகை வாகனங்களும் உண்டு.

திரு நாட்காலங்களில் போதுமான முறையில் போக்குவரத்து ஏற்பாடுகள் அரசு அதிகாரிகளால் செய்தளிக்கப்படுகின்றன. நாகப்பட்டினம் இரயில் நிலையத்திலிருந்து கடற்கரை யோரமாகவே தென்திசை வழியே கால்நடையாக நடந்து வேளாங்கண்ணியை அடையலாம். கொடி வழி போன்ற இக்கடற்-கரைப் பாதைவழியே நெய்தல் நிலத்துக் காட்சிகளை எல்லாம் கண்டு மகிழ்ந்த வண்ணம் வேளாங்கண்ணியை வந்து அடையலாம்.

திருவிழாக் காலங்களில் திருப்பயணிகள் பலர் இவ்வழியாக நடந்து வருவதை பெரிதும்விரும்புவர். கடற் காட்சிகளைக் கண்ட வண்ணம் சற்று தூரத்தில் வரும் போதே கோவில் முகப்பில் உயர்ந்து நிற்கும் கோத்திக் கோபுரங்களைக் காணலாம்.

இத்திருத்தலத்தை அடைய வேறு இரு வழிகளும் உள்ளன.[6] ஆனால் வண்டிவாகன வசதிகள் பெருகியுள்ள இக்காலத்தில் மக்கள் அவ்வளவாக இவ் வழிகளைப் பயன்படுத்துவது இல்லை. நாகப்பட்டினத்திற்கு அருகில் வேதா-ரணியம் கால்வாயில் படகேறித் தெற்குத் திசையில் சென்று கோவிலை அடையலாம். இக்கால்வாயில் போதிய அளவு தண்ணீர் இல்லாவிடில் பயணம் நடைபடும். மற்றொன்று வண்டிப்பாதை நாகையின் தென்மேற்காய் பொய்யூர் சென்று அங்கிருந்துதெற்கே திரும்பி உத்தரிய மாதா தோப்பிற்கு அருகில் வேளாங்கண்ணிக்கு பல வழிகளின் மூலமாக போய்ச் சேரலாம்.[7] 1534 ஆம் ஆண்டு பிரான்சிஸ்கு சபையினர் நாகப்பட்டினத்தில் மறைப் பணியைத் தொடங்கினர். 1606-ஆம் ஆண்டு பரிசுத்த தந்தை 5-ஆம் சின்னப்பர் இப்பகுதியை கொச்சி மறை மாவட்டத்திலிருந்து பிரித்து மைலாப்பூர் மறை

மாவட்டத்துடன் இணைந்தார். அகுஸ்தீன் சபையின் பேரருள் திரு தொம் செபஸ்தியான், தெ. சாவ் பெத்ரோ என்பவர் இம்மறை மாவட்டத்தின் ஆயரானார். அன்று முதல் வேளாங்கண்ணி திருத்தலம் மயிலாப்பூர் மறை மாவட்டத்தின் கண்காணிப்பில் இருந்து வந்தது.[8]

நாகப்பட்டினம் பங்கைச் சேர்ந்த வேளாங்கண்ணித் திருத்தலத்தில் திருப்பயணிகளின் வருகை வளர்ந்து கொண்டே வந்தது. அங்கு வாழ்ந்த மக்களுக்கும், திருப்பயணிகளுக்கும் மறைப் பணியாற்ற 1771-ஆம் ஆண்டு அருள் திரு அந்தோணியோ தெ ரொசாரியோ புதிய பங்கின் முதல் பங்குக் குருவாக நியமிக்கப்பட்டார்.

பல ஆண்டுகள் நாகப்பட்டினத்தில் பங்குத் தந்தையாக பணியாற்றிய இவர் வேளாங்கண்ணிப் பங்குத் தலத்தைச் சிறப்பிக்க ஆவன செய்தார். பங்கு ஆலயம் புனித ஆரோக்கிய அன்னையின் பெயரால் அழைக்கப்பட்டது. தேவதாயின் பிறப்புவிழா ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 8-ஆம் நாள் பங்கின் பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டது. வேளாங்கண்ணி புதிய பங்காக இவ்வாறு உருவாக்கப்பட்டதைப் பற்றி மயிலை மறை மாவட்ட ஆயர்ப் பதிவேடுகளில் விவரங்கள் கிடைக்கின்றன.

1847ஆம் ஆண்டு வரை கோவா மறை மாநிலத்தையும் மயிலை மறை மாவட்டத்தையும் சேர்ந்த பிரான்சிஸ்கு சபைகுருக்கள் நாகப்பட்டினம் வேளாங்கண்ணி ஆகிய பங்குகளைக் கண்காணித்து வந்தனர்.

1961ஆம் ஆண்டு வரை வேளாங்கண்ணி ஆலயப் பிடிப்பகுதியில் பிரான்சிஸ்கு சபைக் குருக்கள் நாகப்பட்டினம் வேளாங்கண்ணி ஆலயப் பிடிப்பகுதியில்பிரான்-சிஸ்கு சபை புனிதர்களான அந்தோனியார், பிரான்சிஸ் இருவரின் திருச் சுரூபங்கள் வைக்கப்பட்டிருந்தன. இதிலிருந்தே இவ்வாலயம் அச்சபையினரின் பொறுப்பில் இருந்துள்ளதை அறியலாம். 1889-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் வரை அருள் திரு மிக்கேல் பிரான்சிஸ்கோ பெர்னாண்டஸ் இச்சபையின் இறுதி பங்கு குருவாகப் பணியாற்றினார்.[8] 1897 -ஆம் ஆண்டு டிசம்பர் முதல் வேளாங்கண்ணி மறைமாவட்டக் குருக்களிடம் ஒப்படைக்கப்பட்டது.[9]

**புதிய மறை மாவட்டத்தில் வேளாங்கண்ணி:**

1949-ஆம் ஆண்டில் மயிலாப்பூர் மறை மாவட்ட நிர்வாகம் பத்ருவாதோ என்று அழைக்கப்பட்ட போர்த்துக்கீசிய அரசு கண்காணிப்பிலிருந்து நற்செய்திப் பணி பரப்புதல் சங்கத்தின் பார்வையின் கீழ் மாற்றப்பட்டது.

1952-ஆம் ஆண்டு நவம்பர்த்திங்கள் தஞ்சாவூர் தனி மறை மாவட்டமாகப் பிரிக்கப்பட்டது. அவ்வமயம் சென்னை மயிலை பேராயராக இருந்த மேதகு ஆர். ஆரோக்கியசாமி சுந்தரம் டி.டி. எல்.சி.எல். எம்.ஏ., அவர்கள் திருநிலை பெற்றுப் பொறுப்பேற்றார். "இயேசு மரியின் இதயங்களே எனது நம்பிக்கை" - என்பது இவர் ஏற்ற விருது வாக்கு. பரிசுத்த தந்தை 12-ஆம் பத்திநாதரால் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட புதிய தஞ்சாவூர் மறைமாவட்டத்தை வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னைக்கு ஒப்புக் கொடுத்தார்.

1954-ஆம் ஆண்டு மரியன்னையின் ஆண்டு திருத்தலம் விழாக் கோலம் பூண்டது. தமிழகத்தின் மேதகு பேராயர்களும், ஆயர்களும் ஆலயம் சென்று மறையுரை ஆற்றத் திருப்பலி நிறைவேற்றிச் சிறப்பித்தார்கள்.[10]

ஊர் அமைப்பு:

வேளாங்கண்ணியைச் சுற்றி 17 கிராமங்கள் உள்ளன. குறிச்சி, கிராமத்து தெற்குபொய்கை நல்லூர், காமேசுவரம், பூவத்தடி, பாலத்தடி-செருதூர், புத்தூர், கருவேலங்கடை, பாப்பாகோ, எட்டாவடி, பொய்யூர், பறவை போன்ற சிறு கிராமங்கள் உள்ளன. இங்கு எல்லா வகை சாதி மக்களும் உள்ளனர். எல்வா சமயத்தவரும் இங்கு உள்ளனர். ~~எல்லா~~ ஆசிய நாட்டு செட்டியும் இங்கு இருக்கின்றனர்.

வேளாங்கண்ணியில் பூர்வீகமாக இருக்கின்ற மக்களும் பிழைப்பிற்காக வந்து குடியேறிய மக்களும் இருக்கின்றனர். வேளாங்கண்ணியின் மக்கள் தொகை 5000தான். ஆனால் அங்கு வந்து போவோரின் மக்கள் தொகை ஆயிரமாயிரமாக இருக்கின்றது. பேருந்து நிலையம் இருக்கின்றது. பேருந்து நிலையத்திற்கு அருகில் சிற்றுண்டி கடைகள், வாடகைக்கு தங்கும் அறைகள் இருக்கின்றன. பேருந்து நிலையத்தில் குடிநீர் வசதிகள் இருக்கிறது. பேருந்து நிலையத்தில் இருந்து ஆலயத்திற்கு செல்லும் வழி நெடுகிலும் அலங்காரப் பொருட்களும், விளையாட்டுப் பொருள்களும் விற்கும் கடைகளும் பாத்திரக்கடைகளும், உணவு விடுதிகளும் இருக்கின்றன. மேலும் அங்கே அஞ்சலகம், காவல் நிலையம், மருந்தகங்கள், சிறுவர் இல்லங்கள், முதியோர் இல்லங்கள் உயர்நிலைக் கல்விக் கூடம், குடிநீர்க்குழாய், தொலைபேசி

இணைப்பகம், வங்கி முதலிய வசதிகளும் இருக்கின்றன. ஒரு ஊருக்கு என்ன வசதிகள் வேண்டுமோ அனைத்து வசதிகளும் இங்கு உண்டு. இங்கு வெள்ளையாறு கடலோடு கலக்கிறது.

இங்குள்ள மக்கள் மரம் ஏறுதல், விவசாயம் செய்தல், மீன் பிடித்தல், வியாபாரம் செய்தல், கைத்தொழில்கள் போன்றவற்றைச் செய்கின்றனர். இங்குள்ள மக்கள் வீடுகள் கட்டி ஆலயத்திற்கு வரும் பயணிகள் சிலநாட்கள் தங்கிச் செல்ல வாடகைக்கு விடுகின்றனர். வாரத்தில் ஒரு நாள் செவ்வாய் கிழமையில் சந்தை கூடுகிறது. அருகில் உள்ள சிற்றூர்களில் விளைவனவும், வகைவகையான கடல்மீன்களும் இந்தச் சந்தையில் விற்பனைக்கு கொணரப்படுகின்றனர். எல்லா வளங்களும் நிறைந்த ஊராக இருக்கின்றது. இங்கு இருக்கின்ற கடைகள் பெரும்பாலானவற்றிற்கு மாதாவின் பெயரை வைத்திருக்கின்றனர்.[11]

இவையெல்லாம் வளர்ந்து வரும் ஒவ்வொரு ஊரிலும் இருப்பவைதாம்... ஆனால் வேளாங்கண்ணிக்கே உரிய சிறப்பம்சம். விண்ணையும் மண்ணையும் உய்வித்த இறைமகன் இயேசுவின் தாய் கன்னி மரியாள் இங்கே கோயில் கொண்டு அருள்பொழியும் காட்சி. இவ்வாறு வேளாங்-கண்ணி பசிலிக்கா என்னும் பெருமை பெற்ற திருத்தலம் அமைந்து சிறப்புப் பெற்று விளங்குகின்றது.

- * - * -

## அடிக் குறிப்புகள்

1. பேரருள் திரு மோன் சிஞ்ஞோர் மோத்தாவான் அடிகள் வேளாங்-கண்ணி திருத்தல வரலாறு. ஒளிநிலையம் தஞ்சாவூர் -1981 -ப.1

2. மே.நூ 'ப.4

3. மே.நூ ப.3

4. மே.நூ ப.2

5. மே.நூ ப.85

6. மே.நூ ப. 85

7. மே.நூ ப. 86

8. மே.நூ ப. 22

9. மே.நூ ப. 25

10. மே.நூ ப. 27

11. நேரில் கேட்டறிந்த செய்தி.

-*-*-*-*-

# கோயில் முக்கியத்துவம்

## கோயில் முக்கியத்துவம்

உலகின் எல்லா மூலைகளிலும் பலவகைச் சமயத்தைச் சார்ந்த கோயில்கள் ஒவ்வொன்றும் தனக்கென தனித் தன்மை வாய்ந்ததாக திகழ்கின்றன. இந்துக்களுக்கு திருப்பதி, பழனி முகமதியர்களுக்கு நாகூர், மெக்கா, மதீனா போன்றவையும் புண்ணிய திருத்தலங்களாக இருப்பது போல் கிறித்தவர்களுக்கு எருசலேம், வேளாங்கண்ணி போன்றவை திருத்தலங்களாக இருக்கின்றன. கிறித்தவர்களின் புண்ணிய தலங்களுள் ஒன்றான வேளாங்கண்ணி தனக்கென ஒரு தனித்தன்மை பெற்று திகழ்கின்றது.

வங்கக் கடலின் ஓரத்திலே ஒருவரும் அறியாத சிற்றூராக இருந்த வேளாங்கண்ணி இன்று திக்கெட்டும் புகழும் திருத்தலமாக மாறியுள்ளது.

"நீலக்கடலின் ஓரத்திலே நீங்கா இன்ப காவியமாம்
காலத்திரையில் எழில் பொங்கும் கலை கருணை ஓவியமாம்"[1]

என்று அதன் சிறப்பை கண்ணதாசன் பாடியுள்ளதை அறிய முடிகிறது. இக்கோயில் போர்த்துக்கீசியரின் வரலாற்றோடு தொடர்புடையதாக இருக்கின்றது.

### சமய நம்பிக்கை:

கிறித்துவ சமயத்தைச் சார்ந்த மக்கள், இயேசுவின் தாய் மரியன்னையிடம் அளவற்ற நம்பிக்கை கொண்டுள்ளனர். திருமணமாகி பல வருடங்கள் குழந்தை இல்லாதவர்கள் தங்களுக்கு குழந்தை பாக்யம் கிடைக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டு மாதா குளத்திற்கு அருகில் உள்ள மரத்தில் வெள்ளைத் துணியை மஞ்சள் நீரில்நனைத்து மரத்தில்

ஒரு கிளையில் தொட்டில் போல் கட்டி அதில் சிறு கல்லை வைத்து விட்டு செல்கின்றனர். தங்களுக்கு குழந்தை பாக்யம் கிடைத்தவுடன் அத்தொட்டிலை ~~காணிக்கையாகச்~~ அவிழ்த்து விட்டுச் செல்கிறார்கள். வெள்ளியால் செய்த தொட்டிலை காணிக்கையாகச் செலுத்துகிறார்கள்.

குழந்தை பிறந்து ஓர் ஆண்டு நிறைவுற்றதும் முதல் முடி வேளாங்கண்ணியில் எடுக்கிறேன் என்று வேண்டிக் கொள்கிறார்கள். சிலர் முடி எடுத்துக் காது குத்துவதாக வேண்டிக் கொள்கிறார்கள். அதன்படி ஓர் ஆண்டு நிறைவுற்றதும் கோயிலுச் சொந்தமான முடி எடுக்கும் நிலையத்தில் முடி எடுத்து கடல்நீரில் குளிக்கச் செய்து பிறகு காது குத்தி தலையில் சந்தனம் பூசி புத்தாடை அணிவித்து குடும்பத்துடன் சென்று தங்கள் நன்றியினைத் தெரிவிக்கின்றனர்.

சிறு குழந்தைகள் மட்டுமல்லாமல் பெரியவர்கள் தாங்கள் வேண்டிய வரங்களைப் பெற்றதும், முடி எடுத்து கடல்நீரில் குளித்துவிட்டு ஈர உடையுடன் கோயிலுக்குச் சென்று நன்றி செலுத்துகின்றனர். சிலர் காவியுடை உடுத்திக் கொண்டுக் கோயிலுக்கு வருவதாக வேண்டிக் காவியுடை உடுத்தி வருகின்றனர்.

வயிற்றுப் போக்கு, வாந்தியினால் துன்பப்பட்ட குழந்தை உயிர் பிழைக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டு பொன்னால் செய்த உருவம் ஒன்றை காணிக்கையாக செலுத்தி இருக்கின்றனர்.

ஈரலில் காச நோய் வந்து மருத்துவரால் கைவிடப்பட்ட ஒருவர் தான் சுகம் பெற்றதற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் வெள்ளியால் ஈரல்

போல் செய்து வைத்திருக்கிறார். இவ்வாறு பலர் தாங்கள் பெற்ற சுகத்திற்கும் நன்மைகளுக்கும் நன்றி தெரிவிக்கும் வகையில் பொன்னாலும், வெள்ளியாலும் செய்த பொருள்களை காணிக்கையாக அளித்திருக்கின்றனர். திருமணம் ஆகாமல் வெகுநாட்கள் இருந்த பெண் ஒருத்தி தான் வேண்டிக் கொண்டபடி திருமணம் ஆனவுடன் கட்டிய தாலியையே காணிக்கையாக வைத்திருக்கின்றாள். இவ்வாறு மக்கள் மாதாவிற்கு காணிக்கையாக அளித்த பொருட்களையெல்லாம் பொது மக்கள் பார்வைக்காக அருங் காட்சியகம் என்ற இடத்தில் பாதுகாப்புடன் வைப்பட்டுள்ளது. காணிக்கை பொருட்கள் முழுவதும் வைக்க முடியாமல் ஏராளமான காணிக்கைப் பொருட்கள் ஓர் அறை முழுவதும் இருக்கின்றன.

இந்த மாதத்தில் 'ஐயப்பன்' கோயிலுக்குச் செல்வதற்கு விரதம் இருந்து மாலை போட்டு நீல நிற உடை/அல்லது / கருப்பு நிற உடை உடுத்தி செல்வது போல் கத்தோலிக்க கிறித்தவர் நீல நிற உடை உடுத்தி அல்லது காவி நிறத்தில் உடுத்தி ஒரு குழுவாக வருகின்றனர்.[2]

<u>காணிக்கை செலுத்தியதற்கான சான்றுகள்:</u>

பேராருட்தாய் புனித ஆரோக்கிய அன்னை வியாதிக்காரர்களின் வினையை அகற்றுகின்ற தாய்; என்னைப் பத்து ஆண்டுகளாக துன்புறுத்தி வந்த குஷ்டரோகம் என்ற கொடிய வியாதியின்று குணப்படுத்தியருளினார்கள். அன்னையின் அருளால் இப்போது நான் சுகத்துடன் இருக்கிறேன். நானும் எனது குடும்பத்தினர் அனைவரும் எங்களின் அகங்குளிர நன்றியையும். இம்

மாங்கல்யத்தையும் சமர்ப்பிக்கின்றோம். வேளை நகர் திருத்தலத் தாயை வேண்டினோர் கைவிடப்படுவதில்லை இது நாடறிந்த உண்மை.

சி. அருள்தாஸ், அற்புதமேரி
சூசையப்பர் கோவில்தெரு, எடையாத்து மங்கலம்

எனக்குண்டான எல்லா வியாதிகளும், என் அன்னைக்கு ஏற்பட்ட புற்றுநோயும். 6-வது முறையாக ஒரே இடத்தில் புறப்பட்டு வேதனை கொடுத்த ஒரு கட்டியும் ஆரோக்ய அன்னையின் வேண்டுதலால் குணமாயின அன்னைக்கு என் மனமார்ந்த நன்றி.

என். முனுசாமி, என் செபமாலை மேரி
அடையாறு-சென்னை-19.[4]

1964-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 27-ஆம் நாள் வெள்ளிக் கிழமையன்று எங்களுக்கு 6-வது பெண், குழந்தை பிறந்தபொழுது குழந்தை வலது கழுத்தில் ஒரு கட்டியுடன் பிறந்தது. அதைக் குணப்படுத்த மருத்துவர்களிடத்தில் காட்டிய போது 5 வயதுக்குப் பிறகு அறுவை மருத்துவத்தின் மூலம் குணப்படுத்த முடியும்என்று கூறிவிட்டார்கள். நாங்கள் 3 ஆண்டுகளுக்குள் குணமடையுமாறு புனித ஆரோக்கிய அன்னையை வேண்டிக் கொண்டோம். அவ்வாறே குணமடைந்து விட்ட படியால் எங்கள் வேண்டுதல்படி காணிக்கையை தாழ்மையுடன் சம்ர்ப்பிக்கின்றோம். எங்களை ஆசிர்வதிக்க வேண்டுகிறோம்.

ஏ. தர்மலிங்கம், எம். சகுந்தலா
ஓட்டுநர், எஸ். ஆர். ரயில்வேகாலனி,
குன்னூர் ஆர். எஸ் (நீலகிரி)[5]

திருச்சி மாவட்டம், லால்குடி வட்டம் கொன்னைக் குடியில் உள்ள எனது கணவர் அ. மரிய ஜுசை ஆசிரியருக்கு உடல்புண் ஏற்பட்டு இரண்டு ஆண்டு காலம் சொல்லொண்ணா துன்பப்பட்டு சுகமாகாமல் நாகப்பட்டினம் வேளாங்கண்ணி புனித அன்னையிடம் கேட்டுக் கொண்ட மன்றாட்டின்படி 25.9.1965ல் அறுவை மருத்துவம் செய்யப்பட்டு நல்ல சுகமடைந்ததற்கு நன்றியறிதலாக எனது தாலியை காணிக்கையாகச் செலுத்துகிறேன்.

அ. ஞான சௌந்தரம், ஆசிரியை
அ. மரியஜுசை ஆசிரியரின் மனையாள்,
கொன்னைக் குடி, லால்குடி வட்டம்
திருச்சி மாவட்டம்.[6]

<u>மதபிணைப்பு</u>:

கிறித்தவ மதம் கத்தோலிக்கம் பெந்தகோஸ்ட் புரோட்டஸ்டாண்ட் என்று பல பிரிவுகளாக இருக்கின்றது. ஒவ்வொரு பிரிவினருக்கும் தனித் தனி கோயில்கள் காணப்படுகின்றன. வழிபாட்டு முறைகள் வெவ்வேறாக காணப்படுகின்றன. வேளாங்கண்ணி ஒரு கத்தோலிக்க கோயில். கத்தோலிக்க வழிபாட்டு முறைகள்தான் நடைபெறுகின்றன. கத்தோலிக்க வழிபாடு உருவ வழிபாடு. புரோட்டஸ்டாண்ட் சிலுவை மட்டும் வைத்து வழிபாடு செய்கின்றனர். இவ்வாறு ஒவ்வொரு பிரிவினரும் வழிபாட்டு முறைகள் கொள்கைகள் வேறு என்றாலும் கத்தோலிக்க கோயிலான வேளாங்கண்ணிக்கு பெந்தகொஸ்ட், புரோட்டஸ்டாண்ட் போன்ற பல பிரிவினரும் இக்கோயிலுக்கு வேறுபாடு இன்றி வருகின்றனர். இந்த வகையில் வேளாங்கண்ணி கிறித்தவர்களை ஒன்றுபடுத்தும் தலமாக மதப்பிணைப்புக்கு காரணமாக விளங்குகின்றது.

சமுதாய பிணைப்பு:

கிறித்தவ கோயிலான வேளாங்கண்ணிக்கு கிறித்தவ மதத்தவர்கள் மட்டுமின்றி எல்லா இனத்தவரும் எல்லா சமயத்தவரும், எல்லா குலத்தவரும் வருகின்றனர். இந்துக்களும், முகமதியர்களும் இந்தக்கோவிலை தரிசிக்க வருகின்றனர். இந்த ஆலயத்தின் பிரப்பவர்களில் பெரும்பாலோர் இந்துக்களே ஆவர்.[7] இந்துக்கள் அவர்கள் முறைப்படி வேண்டுதல்நிறைவேற்றுகின்றனர். உலகின் பல்வேறு இடங்களில் இருந்தும் இக்கோயிலுக்கு வருகின்றனர். இவ்வாறு பல சமயத்தவரும், பல இனத்தவர்களும், பல மொழிகள் பேசுவோரும் இங்கு வருவதால் சமுதாய பிணைப்பு ஏற்படுவதற்கு வழிவகுக்கும் முக்கிய கேரியிலாக வேளாங்கண்ணி விளங்குகிறது.

ஜனாதிபதி வருகை:

இந்திய ஜனாதிபதி—"செயில்சிங்% தமது தமிழக சுற்றுப்பயணத்தின் போது 24.8.82 அன்று அன்னை வேளாங்கண்ணி மாதா கோவிலுக்கு விஜயம் செய்தார். இந்த மாதா கோவிலுக்கு வருகை தந்த முதல் ஜனாதிபதி இவர்தான். இவருக்கு முன்பு பதவியிலிருந்த ஆறு ஜனாதிபதிகளில் யாரும் மாதா கோவிலுக்கு வரவில்லை.[8]

திரைப்படம்:

மாதாவின் வரலாறு 1967-ல் அன்னை வேளாங்கண்ணி என்ற பெயரில் படமாக வெளி வந்தது. இப்படத்தை கேரளாவைச் சார்ந்த நடன டைரக்டர் கே. தங்கப்பன் என்பவர் வெளியிட்டார். மாதாவின்

வரலாறு நாட்டிய நாடகமாகவும், வந்திருக்கின்றது. ராஜ்-சகுந்தலா குழுவினரால் சென்னையில் நடத்தப்பட்ட இந்த நாடகத்தை பார்த்தும் மாதாவின் பெருமைகளை கேட்டும் அன்னை வேளாங்கண்ணி என்ற படத்தை எடுத்ததாக கூறுகிறார். மேலும் இப்படம் மலையாளத்தில் டப்பிங் செய்யப்பட்டு வெள்ளிவிழா கொண்டாடியிருக்கின்றது. தெலுங்கில் மேரி மாதா என்ற தலைப்பில் டப்பிங் செய்யப்பட்டு வெளியிடப்பட்டிருக்கின்றது. இப் படத்தை எடுத்த கே. தங்கப்பன் இப்படத்திற்காக பல பரிசுபொருட்களையும், பொன்னாடைகளையும் பெற்றிருக்கின்றனர். தஞ்சை ஆயர் அவருக்குக் கேட-யத்தை அளித்து பாராட்டியிருக்கின்றார். அன்னை வேளாங்கண்ணி திரைப்-படம் பல சமயத்தவரின் பாராட்டையும் பெற்றிருக்கின்றது.[9]

மாதாவின் பெயரால் பல இடங்களில் எழுந்த ஆலயங்கள், கல்வி நிறுவனங்கள் ஏராளம். அதற்கு எடுத்துக் காட்டாக இருப்பது சென்னை தியாகராஜ நகரிலுள்ள உஷ்ரைன் வேளாங்கண்ணி மேல்நிலைப்பள்ளி. அதன் நிறுவனர் திருமதி-மாலதி பணிக்கர். அவருடைய கணவர் கோவிந்த பணிக்கர். இவர் கேரளக்காரர், பி.ஏ., பட்டதாரி இராணுவத்தில் இருந்தவர். மாலதி கும்பகோணத்தைச் சார்ந்த வைதீகப் பிராமண குலத்தைச் சார்ந்தவர். 1964-ல் கீற்றுக் கொட்டகையாக இருந்த பள்ளி இப்பொழுது மாடிக் கட்டிடமாக இருக்கின்றது. அப்பொழுது 12 மாணவர்கள் மட்டுமே இருந்தனர். இன்று 4500 மாணவர்கள் படிக்கிறார்கள்-360 ஆசிரியர்கள் பணிபுரிகிறார்கள். விடுதியில் 450 பேர் இருக்கிறார்கள். இப்பள்ளிக்குச் செல்லும் நுழைவாயிலில் வேளாங்கண்ணி மாதாவின் சிறிய கோவிலை வைத்திருக்கின்றனர்

இவர்கள் கிறித்தவர் அல்லாத பிற மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் மாதாவையே வழிபட்டு வருவதாக கூறியிருக்கின்றார். மாதாவின் அருளால் தான் நாங்கள் முக்திக்கு வந்தோம் என்று கூறியிருக்கின்றார்.[10] வேளாங்கண்ணியிலும் மாதாவின் பெயரில் பல நிறுவனங்கள் இருப்பதைக் கான முடிகின்றது.

பசிலிக்கா என்னும் பெருமை:

கிறிஸ்தவ ஆலயம் ஒன்றுக்குக் கிட்டக் கூடிய மிகச் சிறந்த பெருமை "பசிலிக்கா" என்னும் பேராலயத் தகுதிக்கு அது உயர்த்தப்படுவதேயாகும்.[11]

பசிலிக்கா எனும் புராதனக் கிரேக்கச் சொல்லுக்கு அரசமண்டபம் என்றும், அழகிய மண்டபம் என்றும் பொருள் கொள்ளப்பட்டது. ஏதென்ஸ் நகரில் தான் முதன் முதல் இப்பெயரில் பெரியதொரு மன்றம் கட்டப்பட்டது. கிரேக்கம் வீழ்ந்து உரோமைப் பேரரசு எழுந்த பின்னர் இந்தக் கட்டிடக் கலையும் அங்கே சென்றது. ஜீலியஸ் சீசர் [Basilicajulia] என்ற பெயரில் அரசவை ஒன்றை அழகுற எழுப்பினான். அந்த மரபு நெடுங்காலம் தொடர்ந்தது.

பிற்காலத்தில் பசிலிக்கா என்னும் சொல் பெரிய கிறிஸ்தவக் கோயில்களை குறிப்பதாயிருந்தது. கான்ஸ்டன்டைன் பேரரசன் இதில் முன்னோடியாக விளங்கினான். லாட்ரன் என்மிடத்தில் பாப்பரசர் தன் மாளிகையையும், ஆலயத்தையும் கட்டிக் கொள்ள அனுமதி கொடுத்தான்.

உரோமையில் புனித இராயப்பர் கல்லறை மீது அவனே பெரியதொரு ஆலயம் கட்டினான். அதைத் தொடர்ந்து கிறிஸ்து பிறந்த பெத்லகேம், நசரேத்து வேத காட்சிகள், மரித்த காபுவா, அந்தியோக். முதலான இடங்களில் எல்லாம் பேராலயம் கட்டி வைத்தான். அன்று முதல் அரசவை மண்டபங்களைப் போல ஆலயங்களையும் அழகுறப் பெரிதாகக் கட்டும் வழக்கம் நிலைப் பெற்றது.

இவற்றிற்கு வரலாற்றுப் பின்னணியும் இருத்தல் வேண்டும். புனிதர் திருச்சடலங்கள் அல்லது பூசனைக்குரிய ஸ்ரூபம் என்பன இடம் பெறுதல் வேண்டும். புதுமை விளங்கும் புண்ணியத்தலமாக அது பொலிய வேண்டும் இவை உயர்நிலை பேராலயங்கள் என்றும், சிறுதரப் பேராலயங்கள் என்றும் இவை இருவகைப்படும்.[12]

புனித அருளப்பர் லாட்டரன் பேராலயம் பாப்பரசர்க்கு உரிய மரபு வழிப் பேராலயம் அவருடைய ஆளுமை இருக்கைக்கு உரிய மரவு வழிப்-பேராலயம் அவருடைய பேராலயம் இதுதான். புனித இராயப்பர் பேராலயத்தை விட இது தொன்மையானது. 15 நூற்றாண்டிற்குப் பின்னரே இராயப்பர் பேராலயம் இத்தகுதி பெறத் தொடங்கியது. பாப்பரசரின் அலுவல் முறைப் பேராலயமாகவும், நாளடைவில் இடம் பெற்றுவிட்டது கிறிஸ்தவ உலகில் உள்ள பேராலயங்களில் எல்லாம் மிகப் பெரியது என்றும் பெருமைக்குரியது இதுவே.

உயர்நிலைப் பேராலயங்கள் பெரும்பாலும் கர்தினால்களின் கண்காணிப்பில் இருக்கும். சிறுதரப்பேராலயங்கள், பாப்பரசரால்

வழங்கப்படும் சில சிறப்புக்களைக் கொண்டு விளங்கும்.

இந்தியாவில் ஐந்து சிறுதரப் பசிலிக்காக்கள் உள்ளன. பம்பாய், பாந்த்ராவில் உள்ள மலை மாதா பேராலயம், கோவாவில் உள்ள போம்சேசு பேராலயம், மைலாப்பூரில் உள்ள புனித தோமையார் பேராலயம், வேளாங்கண்ணியில் உள்ள ஆரோக்கிய அன்னை பேராலயம், பெங்களூரில் உள்ள ஆரோக்கிய மாதா ஆலயம்.

தஞ்சை மறைமாவட்ட முதல் ஆயராகிய மேன்மை தங்கிய இரா. ஆரோக்கியசாமி சுந்தரம் ஆண்டகை, இத்திருத்தலத்தைப்பேராலயத்திற்கு உயர்த்த வேண்டுமெனப் பரிசுத்த பாப்பரசர் 23-ஆம் அருளப்பரிடம் வேண்டிக் கொண்டார்கள்.[13]

போர்த்துக்கீசியரின் வரலாற்றுப் பின்னணி உடையதாக இருப்பதாலும், அந்த ஆலயத்தில் உள்ள மரியன்னை சுரூபம் பக்தர்களின் மன்றாட்டுகளை கேட்பதாக சொல்லப்படுவதாலும், இக்கோவில் கலைகள் மலிந்த பல்வகை வேலைப்பாடுகளால் விளங்குவதோடு இறைவழிபாட்டு முறையைச் சிறப்பிக்கும் பல்வேறு புனிதப் பொருட்களையும் கொண்டிருப்பதாலும் திருப்பணிகளால் சிறப்புற்று விளங்கும் இந்த ஆலயத்திற்கு சிறுதரப் பசிலிக்கா என்னும் சிறப்புப் பெயரையும், அதற்குரிய உரிமைகளையும் வழங்குமாறு வேண்டிக் கொண்டதன் பேரில் அவ்வேண்டுகோளை ஏற்று 1962 ஆம் ஆண்டு நவம்பர் 3-ஆம் நாள் பாப்பரசர் ஒரு அப்போஸ்தலிக்க மடலை விடுத்து அவரின் வேண்டுகோளை நிறைவேற்றினார். அன்றுமுதல் வேளாங்கண்ணி மாதா கோவில் சிறுதரப்பசிலிக்கா என்னும் பெருமை பெற்றது.

இவ்வாறு வேளாங்கண்ணி அன்னை ஆலயம் மக்கள் நம்பிக்கைக்கு-களுக்குப் பாத்திரமாகவும், மத பிணைப்பு, சமுதாய பிணைப்பு, உண்டாவதற்கு இருப்பிடமாகவும் பசிலிக்கா என்னும் பெருமை பெற்று தனக்கெனத் தனி முக்கியத்துவம் கொண்டு விளங்குகிறது.

- - -

## அடிக் குறிப்புகள்

1. கண்ணதாசன் பாடல்-அன்னை வேளாங்கண்ணி-திரைப்படம்.

2. நேரில் கண்டறிந்த செய்தி

3. பேரருள் திரு மோன்சிஞ்ஞோர் மோத்தாவாஸ்அடிகள் வேளாங்கண்ணி திருத்தல வரலாறு-ஒளி நிலையம்-தஞ்சாவூர்-1981 பக்கங்கள் 69,70

4. மே.நூ ப.63

5. மே.நூ ப.72

6. மே.நூ ப. 72

7.

8. செகதீஸ்வரன்-தினமணிகதிர்-10.9.82 ப. 79

9. மே.நூ பக்.12-13

10. மே.நூ பக்.16-18

11. பேரருள் திரு மோன்சிஞ்ஞோர் மோத்தாவாஸ் அடிகள் வேளாங்கண்ணி திருத்தலவரலாறு-ஒளிநிலையம்-தஞ்சாவூர்-1981 பக்-29-30

12. மே.நூ ப.30

13. மே.நூ ப.31

- - - - -

திருவிழாக்களும் — வழிபாடுகளும்

~~[illegible] — [illegible]~~

## திருவிழாக்களும் வழிபாடுகளும்

விழாக்களில் பல வகை உண்டு. மனிதர்கள் மனிதர்களுக்காக எடுக்கும் விழாக்கள், தெய்வங்களுக்கு எடுக்கும் விழாக்கள் இயற்கையைப் போற்றும் விழாக்கள் சூரியனுக்கு பொங்கலிட்டு கொண்டாடும் விழாவையைப் பெருவிழாவையைப் பெருவிழா பற்றி பரிபாடலில் கூறப்படுகிறது. இறந்த பெருந் தலைவர்களுக்கு அவர்கள் நினைவாக விழா எடுக்கப்படுகிறது. தெய்வங்-களுக்கு எடுக்கப்படும் விழாக்களை திருவிழாக்கள் என்றழைக்கின்றனர். ஒவ்வொரு சமயத்திலும் தங்கள் தெய்வங்களுக்கு ஒரு குறிப்பிட்ட நாளில் விழா எடுப்பர். இந்துக்கள் ஒவ்வொரு மாதத்திலும் ஒரு குறிப்பிட்ட நட்சத்திரத்திற்கு விழா எடுப்பர். அவ்வாறே கிறித்தவர்களும் இயேசு பிறந்தநாள் விழா, மாதா பிறந்த நாள் விழா, இயேசு உயிர்த்த எழுந்தநாள் விழா என்ற விழாக்கள் எடுக்கின்றனர். வேளாங்கண்ணியில் ஒவ்வொரு மாதமும் சில திரு-விழாக்களை கொண்டாடுகின்றனர். ஒவ்வொரு மாதமும் நடைபெறும் திரு-விழாக்களில் செப்டம்பர் திங்கள் எட்டாம் நாள் கொண்டாடும் விழாதான் அங்கு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. செப்டம்பர் திங்கள் எட்டாம் நாள் மாதாவின் பிறந்த நாள் விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

**காரணம்:**

பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் வங்கக் கடலில் புயலில் சிக்கித் தவித்த போர்த்துக்கீசிய வணிகர்கள் மாதாவிடம் வேண்டுதல் செய்த பின் நலமுடன் செப்டம்பர் திங்கள் எட்டாம்நாள் வேளாங்கண்ணி கரையை அடைந்-தார்கள். அந்நினைவு நாளை ஒட்டித்தான் ஆண்டுதோறும் வேளாங்கண்ணித்

திரு நகரில் அருள்மிகு ஆரோக்கிய அன்னைக்கு விழா எடுக்கப்படுகிறது.[1]

**வேளாங்கண்ணி மாதா திருவிழா:**

வேளாங்கண்ணி ஆரோக்கிய மாதா திருவிழா செப்டம்பர் திங்கள் எட்டாம் நாள் கொண்டாடப்படுகிறது. இவ்விழா பத்து நாட்கள் நடைபெறுகின்றது. விழாவின் ஆரம்பமாக திருப்பலி நிறைவேற்றப்பட்டு கொடியேற்றப்படுகிறது. கொடியேற்றி இறக்குதல் பத்துநாட்கள் வரையிலும் நடைபெறும். ஆகஸ்ட் திங்கள் 29-ஆம் நாள் கொடியேற்றப்பட்டு செப்டம்பர் திங்கள் 8-ஆம் நாள் விழா நிறைவடைகறது. அப்பத்து நாட்களும் தாயகத்தின் பலப் பகுதிகளிலிருந்தும், பிற நாடுகளிலிருந்தும் ஏறத்தாழ பத்து இலட்சம் திருப்பயணிகள் வரை விழாவில் பங்கு கொள்கின்றனர். அவர்களுள் சிலர் பத்து நாட்களும் வேளாங்கண்ணியில் தங்குகிறார்கள். மற்றவர்கள் இடை இடையே வந்து செல்கின்றனர்கள்.[2]

**திருப்பலி:**

ஆகஸ்ட் 29-ஆம் தேதி ஆரோக்கிய மாதாவிற்கு கொடியேற்றப்பட்டதிலிருந்து திருவிழா முடியும் வரை ஒவ்வொரு நாளும் காலை 5.30 மணிக்கு உபய நாட்களில் முதல் திருப்பலி நிறைவேற்றப்படும். திருப்பலி முடிந்தவுடன் கருகை ஆசிர் நடைபெறும். 6.30 மணிக்கு பாடல் திருப்பலி நடைபெறும். ஒவ்வொரு மணி நேரமும், ஒவ்வொரு மொழியிலும் திருப்பலி நடைபெறும். மாலை 6.30நவநாள் செபம், செபமாலை, திவ்ய நற்கருணை ஆசிர் நடைபெறும். செப்டம்பர் 7-ஆம் தேதி மாலை தங்கை

ஆயர் தலைமையில் வழிபாடு நடைபெறும். 8 ஆம் தேதி காலை 7.00 மணிக்கு ஆயர் அவர்கள் பொந்திபிக்கல் பாடல் திருப்பலி நிறைவேற்றுவார்கள்.[3]

## கொடியேற்றம்:

போர்த்துக்கீசியர் கொண்டு வந்த வைத்த கொடிமரத்தில்தான் இன்றளவும் கொடியேற்றப்படுகிறது. கொடிமரம் கோயிலின் வலதுபுறத்தில் இருக்கின்றது. அக்கொடிமரத்தில் நீல நிற வண்ணம் பூசப்பட்டுள்ளது. வேளாங்கண்ணியில் இருக்கும் மக்களில் உபயம் செய்பவர்களால் கொடியேற்றப்படுகிறது. வேளாங்கண்ணி பங்கைச் சேர்ந்த கிராமங்கள் எட்டு. காமேஸ்வரம், வேட்டைக்காரன் இருப்பு, பூவத்தடி தெற்குப் பொய்கைநல்லூர் போன்ற கிராமங்களாகும். முதல் நாள் மாலை 6.30 மணிக்கு கொடியேற்றப்படுகிறது. 6 மணிக்கு கொடி ஊர்வலம் வரும். ஒவ்வொரு நாளும் பகல் 12 மணிக்கு கொடியேற்றுவார்கள். இரவில் இறக்கி விடுவார்கள். முதல் நாள் வேளாங்கண்ணியில் இருக்கும் மக்களில் உபயம் செய்பவர்களால் கொடியேற்றப்படுகிறது. இரண்டாம்நாள் நாகப்பட்டினக்காரர்களால் கொடியேற்றப்படுகிறது. மூன்றாம் நாள் நாடார்களால் கொடியேற்றப் படுகிறது. ஏழாம் நாள் பாம்பேயில் இருந்து வந்தவர்களால் கொடியேற்றப்படுகிறது. ஒன்பதாம் நாள் உள்ளூரில் இருக்கும் உபயம் செய்பவர்களால் கொடியேற்றப்படுகிறது. கொடியேற்றத்திற்குமுன் திருப்பலி நிகழ்வுறும்.[4]

## தேர்பவனி:

கொடியேற்றி மாலை வழிபாடு முடிந்த பிறகு எட்டு மணி அளவில் தேர்ப்பவனி தொடங்கும். நாள்தோறும் இரு சிறு சப்பரங்களும் ஒரு பெருந் தேரும்

பவனியில் பங்கு கொள்கின்றன. வேளாங்கண்ணி கடற்கரைப்பகுதி ஆனதால் மணலில் தேரை இழுத்துச்செல்ல முடியாது. தேரைத் தோளில் சுமந்துதான் செல்ல வேண்டும். சப்பரங்களைத் தோளில் சுமந்துதான் செல்ல வேண்டும். சப்பரங்களைத் தோளில் சுமந்துசெல்ல திருப்பயணிகள் முன் வருவார்கள். சில சப்பரங்களைப் பெரும்பாலும் பெண்களே சுமந்து செல்வர். தேர் கோயிலிலிருந்து நேரே கிழக்கு நோக்கிச் சென்று கடற்கரை வழியாக சுற்றிக்கொண்டு கோயிலை வந்தடையும். அவ்வாறு வந்தபின் மாதாவை நோக்கி வேண்டுதல் சொல்லப்படும். தேர்கள் வண்ண வண்ண மலர்களாலும் மின் விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கும். அடியவர்கள் மரியே வாழ்க என்று வாழ்த்தொலி எழுப்புவார்கள். கோயில் கோபுரங்கள் எல்லாம் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். ஆலயத்தைச் சுற்றிலும் எங்கும் ஒளி மயமாக காட்சி அளிக்கும்.

செப்டம்பர் ஆறு ஏழு தேதிகளில் பெரிய தேர் ஒன்று புறப்படும். அத்தேர் ஒரு சிற்றாலயம் போல் காட்சி அளிக்கும்.[6] தேரின் முன்புறம் வாத்தியக்காரர்கள் இனிய இசைகளை எழுப்பிய வண்ணம் செல்வார்கள். தேர் சுற்றி வரும்பொழுது பக்தர்கள் செபமாலை சொல்லிக்கொண்டும் பாடல்களை பாடிக்கொண்டும், வேண்டுதல் செய்துக்கொண்டும் வருவார். செப்டம்பர் எட்டாம் நாள் இரவு எட்டு மணிக்கு அங்கு வாழும் பிச்சைக்காரர்கள் சப்பரங்களைத் தூக்கிச் செல்வர். எட்டாம் நாள் சப்பரம் எடுக்க பிச்சைக் காரர்களுக்கு ஒதுக்கியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். செப்டம்பர் திங்கள் 8ம் நாளன்று காலை மேதகு ஆயர் அவர்கள் ஆடம்பரப்பாடற்பலி நிறைவேற்றுவார்கள். மாலையில் கொடி இறக்கப்பட்டு விழா இனிதே முற்றுப்பெறும். இவ்வாறு பத்து நாட்கள் தேர்ப்பவனி சிறப்பாக நடைபெறும்.[7]

## கலை நிகழ்ச்சிகள் :

ஒவ்வொரு நாளும் தேர்ப்பவனி முடிந்தும் கலையரங்கத்தில் கலை நிகழ்ச்சிகள் நிகழ்வுறும். இசைக்கச்சேரி, நாட்டிய நாடகம் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறும். இசைக்கச்சேரிக்கு தமிழகத்தின் பல பகுதிகளில் இருந்தும் புகழ் பெற்ற கலைஞர்கள் பலர் வந்து பாடுவர். ஜேசுதாஸ், டி.எம்.சௌந்திர ராஜன், எஸ்.ஜானகி, பி.சுசிலா, ஜாலி ஆப்ரகாம் போன்ற பலர் வந்து கச்சேரி செய்வர். கோயில் திருவனங்களில் பணி புரிபவர்கள் அங்குப்பயிலும் மாணவ மாணவியர்கள், இயேசுவின் பாடுகள் மரியன்னை செய்த புதுமைகள் ஆகிய வற்றை நாடகமாக நடிப்பார்கள். பரத நாட்டிய நிகழ்ச்சிகள் நடைபெறும். அன்னை வேளாங்கண்ணி திரைப்படமும் காட்டப்படும், இரவு 9 மணியிலிருந்து 12 மணி வரை கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.[8]

## திருப்பலி முக்கியத்துவம் :-

விழாவின் மையமாக திருப்பலி அமைகிறது. இயேசு கல்வாரிக்குன்றிலே குருதி சிந்தி உலகத்தை மீட்டார். தன்னையே பலிப் பொருளாக கையளித்தார். அக்கல்வாரிப்பலி நாள்தோறும் கிறிஸ்தவப் பீடங்களில் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. அந்தத்திரு பலிதான் விழாவின் மைய நிகழ்ச்சியாக அமைகிறது. திருப்பணிகளின் நலத்தை முன்னிட்டு நாள்தோறும் காலையிலிருந்து மாலை வரை திருப்பலி பல முறை நிறைவேற்றப்படுகிறது. திருப்பலியின் போது பல மொழிகளில் ஒப்புரவு அருட்சாதனம் நல்கப்படுகிறது. பாவ சங்கீர்த்தனம் என்பது பாவ மன்னிப்பு பெறுவதற்கான கிறிஸ்து வகுத்திருக்கும் குருவிடம் பாவங்களை அறிக்கையிடும்பொழுது அவர் கிறிஸ்துவின் பெயரால் மன்னிக்கிறார். பாவியும் மன்னிப்பு பெறுகிறான். நற்கருணை என்பது ஆன்ம உணவாகும்.

கிறிஸ்து தம் உடலை மனிதனின் ஆன்ம உணவாகவும் குருதியை ஆன்மபானமாகவும் வழங்கியுள்ளார். கிறிஸ்தவர்கள் அதனை உண்டு ஆன்ம உரம் பெறுகின்றனர். இதனைப் பெற வேண்டுமானால் ஒருவர் திருமுழுக்குப் பெற்றிருக்க வேண்டும். அதுவே அவரைக் கிறிஸ்துவோடும் அவர் நிறுவிய திருச்சபையோடும் இணைக்கிறது. எனவேதான் திருமுழுக்கால் கிறிஸ்துவோடு இணைக்கப்படாதவர்களுக்கு அந் நற்கருணை உணவு வழங்கப்படுவதில்லை. இவற்றையெல்லாம் கவனிப்பதற்காகத்தான் நூற்றுக்கு மேற்பட்ட குருக்கள் விழாக்காலத்தில் பணியாற்றுகின்றனர்.[9]

பேராலய பெரிய பீடத்தில் காலை முதல் திருப்பலி நிறைவேற்றப்பட்டதிலிருந்து இரவு வரை திருப்பயணிகள் காணிக்கை செலுத்திய வண்ணம் இருப்பார்கள்.[10].

<u>பிற திருவிழாக்கள் :-</u>

ஜனவரி :- ஜனவரி மாதம் மூன்று அரசர்கள் திருநாள் வேளாங்கண்ணியில் கொண்டாடப்படுகிறது. அன்று கோயிலில் பங்குச் சிறுவர் சிறுமியர்க்குப் புது நன்மை வழங்கப்படும். ஜனவரி முதல் தேதி கன்னி மரியாள் இறைவனின் அன்னை பெருவிழா நடக்கிறது.[11]

எட்டாம் நூற்றாண்டுப் பூசைகளின் பழம் பிரதியில் ஜனவரி முதல் நாளைப் புனித மரியின் பிறப்புநாள் என்று அழைக்கின்றனர். இந்நாளுக்குரிய உரோமையத் திருப்புகழ் மாலையில் புனித கன்னி மரியின் தெய்வீகத் தாய்மையை மாட்சிமை படுத்தும் செபங்கள், பல்லவிகள், பதிலுரைகள் பல இன்று மட்டும் காணப்படுகின்றன. எனவே கர்த்தர் பிறப்பு விழாவின் எட்டாம் நாள் கொண்டாட்டத்தோடு கன்னிமரி தேவனின் தாய் என்பதின் கொண்டாட்டமும்

வெளிப்படையாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன.[12] ஆங்கில வருடப் பிறப்பை புத்தாண்டுப் பிறப்பு என்று மக்கள் மகிழ்ச்சி கரமாகக் கொண்டாடுகின்றனர் அன்று நன்றியறிதல் திருப்பலியும், வருடம் முழுவதும் நல்ல நாட்களாக இருக்க வேண்டும் என்றும் சிறப்புத்திருப்பலியும் நடைபெறும்.

பிப்ரவரி 2 ஆம் தேதி-

ஆண்டவர் காணிக்கையாக்கின் விழா - கன்னி மரியாவின் சுத்திகரத் திருநாள்.

தேவாலயத்தில் ஆண்டவரைக் காணிக்கையாக ஒப்புக் கொடுத்த திருநா திருநாளைப் பற்றிய சான்று யெருசலேமில் 5ஆம் நூற்றாண்டிலிருந்தே கிடைத்துள்ளது. இத் திருநாள் "உறிப்பா" (சந்திப்பு) என்ற பிறிதொரு பெயரில் உரோமாபுரியில் 7 ஆம் நூற்றாண்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் 10- ஆம் நூற்றாண்டில் இருந்து மேற்றிசை வழிபாட்டுப் புத்தகங்கள் மரியன்னையின் சுத்திகரிப்பைப் பெரிது படுத்தின. இதனால் இத்திருநாளுக்குப் பெயரும் சுத்திகரத் திருநாள் என்று அழைக்கப்படுகிறது. ஆனால் கி.பி 1960 - ஆம் ஆண்டு வெளிவந்த திருவழிபாட்டு விதிகளின்படி கீழ்த்திசைத் திருச்சபைகளை இத்திருநாளை ஆண்டவரின் திருநாளாகக் கொண்டாடுகின்றனர்.[13]

இத்திருநாள் வேளாங்கண்ணியிலும் பிப்பிரவரி 2 ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. அன்று காலையில் முதல் திருப்பலி முடிந்தவுடன் ஆலயத்தின் முன்புறம் பங்குக்குருவால் மெழுகுதிரிகளை ஏற்றியவுடன் மெழுகு திரிகளை கையில் பிடித்துக்கொண்டு ஆலயத்தின் வலப்புறமாகச் சுற்றிக் கொண்டு பின்புறம் உள்ள கோயிலுக்கு செல்வர். அங்குத் திருப்பலி நடைபெறும்.

மார்ச் 25 ஆம் தேதி மங்கள வார்த்தை திருநாள் :-

பரிசுத்த கன்னி மரிக்குச் சொன்ன மங்கள வார்த்தை என்றிருந்த திருநாளின் பெயர் ஆண்டவரின் மங்கள வார்த்தை என்று மாற்றம்

பெறுகிறது. இதனால் இவ்விழா ஆண்டவருடைய விழா என்று இன்றும் சுற்று எளிதில் கண்டு கொள்ளலாம்.

இம் மங்கள வார்த்தை விழாக் கீழ்த்திசையில் தொடங்கியது. 7 ஆம் நூற்றாண்டில் இவ்விழா ஆண்டவருடைய மங்கள வார்த்தை என்ற பெயரில் உரோமாபுரியில் வரவேற்புக் கண்டது. இதற்கு பாப்பரசர் பயன்படு~~த்தி~~ படுத்திய வழிபாட்டுப் புத்தகம் சான்று பகர்கிறது. அம்புரோசியார் வழிபாட்டு முறையும், கீழ்த்திசை வழிபாட்டு முறைகளும் இவ்விழாவை ஆண்டவருடைய விழாக்களில் ஒன்றாகவே கருதுகின்றன.[14]

<u>மே மாதம் :-</u>

மே மாதம் தேவ தாயின் வணக்க மாதம் என்று குறிக்கப்படுகிறது. மே மாதம் முழுவதும் வேளாங்கண்ணியில் திருவிழாக் கோலமாக இருக்கும் மே மாதம் முழுவதும் திருவிழாவிற்கு மக்கள் வந்துகொண்டே இருப்பார்கள். 30 நாட்களும் தேர்ப்பவனி நடைபெறும். மே மாதத்தில் மக்கள் கூட்டம் வேளாங்கண்ணியில் அதிகமாக இருக்கும்.[15]

ஒவ்வொரு நாளும் காலை 5-45க்கு முதல் திருப்பலி நடைபெறும். திருப்பலி முடிந்தவுடன் மாதாவின் ஆசீர் 7.00 மணிக்கு பாடல் திருப்பலி நடைபெறும். 11.00 மணிக்கு திருப்பலி ஆங்கிலத்தில் நடைபெறும். மாலை 5.30 மணிக்கு வணக்க மாதா வாசகம், நவநாள் செபம், சப்பர சுற்றுப்பிரகாரம் திவ்ய நற்கருணை ஆசீர் நடைபெறும். 31 ஆம் தேதி திவ்ய நற்கருணைத் திருநாள் பாடல் திருப்பலி முடிந்தவுடன் திவ்ய நற்கருணை ஸ்தாபகம் செய்து பகல் முழுவதும் ஆராதனை நடைபெறும். மாலை 6.00 மணிக்கு திவ்ய நற்கருணைபவனி மறையுரை திவ்ய நற்கருணை ஆசீர்.[16]

ஜூன் :-

திரு இருதய வணக்க மாதம் மாலையில் ஒவ்வொரு நாளும் 5.40 மணிக்கு நவ நாள், செபம், செபமாலை திரு இருதய பிரார்த்தனை திவ்ய நற்கருணை ஆசீர். மாலை திருப்பலி நடைபெறும். 30 ஆம் தேதி மாலை திரு இருதய சுற்றுப்பிரகாரம்.[17]

ஜூலை :-

6 ஆம் தேதி மாலை உத்திரிய மாதா கொடியேற்றம் நடைபெறும். 15-ஆம்தேதி மாலை உத்தரிய மாதா தேர் பவனி 16-ஆம் தேதி உத்தரிய மாதா திருநாள் நடைபெறும். அப்பொழுது சிறப்பு திருப்பலி நடைபெறும்.[18]

ஆகஸ்ட்

29-ஆம் தேதி ஆரோக்கிய மாதா திருநாளுக்கும் கொடியேற்றம் காலை 5.30 ஜெபநாட்களில் முதல் திருப்பலி நடைபெறும். திருப்பலி முடிந்தவுடன் சுரூப ஆசீர் வழங்கப்படும். 6.30 மணிக்கு பாடல் திருப்பலி நடைபெறும். ஒவ்வொரு மணிநேரமும் ஒவ்வொரு மொழியிலும் திருப்பலி நடைபெறும். மாலை 6.30 மணிக்கு நவநாள் செபம், ஜெபமாலை, திவ்ய நற்கருணை ஆசீர் நடைபெறும். இரவு 8.00 மணிக்கு தேர்ப்பவனி நடைபெறும்.[19]

அக்டோபர்:

7-ஆம் தேதி செபமாலை மாதா திருநாள்

பெல்கிராடுக்கருகில் லெபான்ஜோ என்னுமிடத்தில் கிறிஸ்தவர்கள் கப்பற்படையால்/1571/ வெற்றி அடைந்தார்கள். அந்த வெற்றி.

செபமாலை ஜெபித்து மன்றாடி தேவ அன்னையின் வழியாகப் பெற்ற பேருதவியாகக் கருதப்பட்டது. இதையெல்லாம் நினைவு கூறும் வருடாந்திர நாளாக இத்திருநாளைப் பாப்பு புனித 5-ஆம் பத்தி நாதர் 1573 ஆம் ஆண்டு ஏற்படுத்தினார். இறைவனின் திருமகன் மனுவுரு எடுத்த போதும், பாடுபட்ட போதும், உயிர்த்தெழுந்த மகிமையுற்ற போதும் அவருடன் தனி சிறந்த முறையில் புனித கன்னிமரி தொடர்பு கொண்டிருந்தாள். அந்தக் கன்னி மரியே வழிகாட்ட கிறிஸ்துவின் மீட்பு மறை நிகழ்ச்சிகளை அனைவரும் தியானிப்பதற்கு இன்றைய திருநாள் கொண்டாட்டம் தூண்டுகிறது.

அக்டோபர் முதல் ஞாயிறன்று கொண்டாடப்படுமாறு இத்திருநாள் 1716 ஆம் ஆண்டு உரோமையப் பட்டியலில் இடம் கண்டது. பின்னர் 1913 ஆம் ஆண்டு இத்திருநாள் அக்டோபர் 7ஆம் நாளுக்கென்று குறிக்கப்பட்டது. அந்த நாளில் வேளாங்கண்ணியில் செபமாலை மாதா திருநாள் கொண்டாடப்படுகிறது.[20]

__நவம்பர் 21:__

__கன்னிமரியாள் காணிக்கையாக ஒப்புக் கொடுக்கப்பட்ட திருநாள்:__

பழங்கால யெருசலேம் தேவாலயத்திற்கு அருகாமையில் புனித மரியாளின் புதிய ஆலயம் என 543 ஆம் ஆண்டு கட்டியெழுப்பப்பட்டது. அபிஷேகம் செய்யப்பெற்ற அன்று விழாவாகிய இன்று கீழைத்திருச்சபையில் விசுவாசிகளோடு நாமும் ஒன்று சேர்ந்து மரியாளின் அர்ப்பணத்தையே

கொண்டாடுகிறோம். ஏனெனில் அமல உற்பவியாகக் கருவான போதே பரிசுத்த ஆவியின் அருளால் நிரப்பப் பெற்ற மரியாள், அதே ஆவியானவரின் தூண்டுதலால் குழந்தைப் பருவத்திலேயே தன்னை இறைவனுக்கு அர்ப்பணமாக்கிக் கொண்டாள்.

மேற்குறிப்பிட்டபுதிய ஆலயம் காலப்போக்கில் அழிந்து போயினும், புனித மரியாளைக் காணிக்கையாக ஒப்புக் கொடுத்தது எனும் திருநாள் மறையாது. கீழ்த்திசை எங்கனும் கொண்டாடப்பட்டு வருகிறது. 1373 ஆம் ஆண்டில்/பிரான்சு தேசத்தில்/ அவிஞ்ஞோனில் இருந்த பாப்பரசரால் 1568 ஆம் ஆண்டு இத்திருநாள் எடுபட்டது, என்றாலும், திரும்ப 1585ஆம் ஆண்டு இத்திருநாள் உரோமையைப் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்பட்டது.[21]

<u>டிசம்பர்-8-ஆம் தேதி அமலோற்பவ மாதா திருநாள்:</u>

புனித கன்னிமரியின் உற்பவத் திருநாள் உரோமையைப் பட்டியலில் 1476-ஆம் ஆண்டு சேர்த்துக் கொள்ளப்பட்டது., 1854 ஆம் ஆண்டு செத்துவிசுவாச சத்தியமாக வரையறுக்கப்பட்ட பின், இத்திருநாள் அமலோற்பவம் என்ற திருநாள் ஆயிற்று.[22]

<u>டிசம்பர்-25-ஆம் தேதி கிறிஸ்து பிறப்பு விழா:</u>

கர்த்தர் பிறப்பு விழா ஏறத்தாழ 330 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. 354 ஆம் ஆண்டு தோன்றிய வேதசாட்சிகளின் வரலாற்றுக் குறிப்பேட்டில்

கர்த்தர் பிறப்பு விழா பற்றிய மிகப் பழங்கால சான்று காணக்கிடக்கிறது. இவ்விழா மிகவும் சிறப்பாகச்சிறப்பாகக் கொண்டாடப்படும். மாலை 11.45 மணிக்கு பாடல் திருப்பலி நடைபெறும்.[23]

<u>டிசம்பர் 28 ஆம் தேதி மாசில்லாக் குழந்தைகள் திருவிழா.</u>

கிரோணியல் பட்டியலின்படி மாசில்லாக் குழந்தைகளின் திருநாள் டிசம்பர் 28 ஆம் நாள் கொண்டாடப்படுகிறது. இதற்கு அடுத்த நாளன்றுதான் இத்திருநாளை சிரியாக், பிசான்டைன், காப்திக் முறைகள் கொண்டாடுகின்றன.

கிறிஸ்து உயிர்ப்பு விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படும் உயிர்ப்பு ஞாயிறை அடுத்து வரும் வெள்ளிக்கிழமை இரவு 9மணிக்கு பாடுகளின் நாடகம் நடைபெறும்.[24]

<u>திருவிழாக்காலத்தில் பேருந்து வசதிகள்</u>

வேளாங்கண்ணியில் செப்டம்பர் 8 - திருவிழா நடக்கும்போது சிலநாட்களுக்கு முன்பாகவே மக்கள் ஆலயம் செல்வதற்கு வசதியாக திருவிழா காலங்களில் போதுமான முறையில் போக்குவரத்து ஏற்பாடுகள் அரசு அதிகாரிகளால் செய்தளிக்கப்படுகின்றன. திருவிழாக் காலங்களில் தனி காவல் அதிகாரிகளும் அமைக்கப்படுகின்றனர். விழாவின் போது பயணிகள் தங்குவதற்கு என்று தற்காலிகமாக ஏறத்தாழ 550 அறைகள் கீற்றுக்களால் கட்டித்தரப்பட்டு வந்தன. இப்பொழுது அவையெல்லாம் சிறு அறைகளாக கட்டப்பட்டிருக்கின்றன. அங்கேயே இத்தனை அறைகளுக்கும் குடிநீர் , சமையல், மின்விளக்கு முதலிய வசதிகள் யாவும் அளிக்கப்படுகின்றன. இவ்வாறு திருவிழாக்காலங்களில் வரும் பயணிகளுக்கு பல வசதிகளும் செய்தளிக்கப்படுகின்றன.

**வழிபாடுகள்:**

## நாள் தோறும் நடைபெறும் பூசைகள்:

காலை 5.45 மணிக்கு முதல் திருப்பலி

6.45 மணிக்கு பாடல் திருப்பலி

10.00 மணிக்கு ஆங்கிலத்தில் திருப்பலி.

## வாரந்தோறும் நடைபெறும் திருப்பலி

வியாழன் மாலை 5.30 திருமணி ஆராதனை

6.30 திருப்பலி

சனி மாலை 5.45-செபமாலை, நவநாள்செபம்,

நற்கருண ஆசிர்

6.30-திருப்பலி

ஞாயிறு காலை 5.45-முதல் திருப்பலி

7.30-பாடல் திருப்பலி

11.00-திருப்பலி ஆங்கிலத்தில்

மாலை5.30 - செபமாலை, நவநாள் செபம்

6.00-திருப்பலி[25]

## மாதந்தோறும் நடைபெறும் திருப்பலி

முதல் வெள்ளி மாலை 5.45 செபமாலை நவநாள் செபம்

தி.நற்கருணை ஆசிர்

முதல் சனி காலை 7.00-யாதா குளத்தில் திருப்பலி[26]

நவநாட்களில் காலை நடைபெறும் திருப்பலியில் ஆங்கிலத்தில் மறையுரையும் மாலை வழிபாட்டில் தமிழில் மறையுரையும் நிகழ்த்தப்படுகின்றன. ஆங்கிலத்தில் நடைபெறும் திருப்பலி மேல்தளக் கோயிலில் மட்டும் நடைபெறும். வேளாங்கண்ணி பங்கைச் சேர்ந்த மக்களுக்கு என்று ஞாயிறு தோறும் பின்புறக் கோயிலில் மாலை 6.00 மணிக்கு திருப்பலி நடைபெறும். அதில் வேளாங்கண்ணி பங்கைச் சேர்ந்த மக்களைத் தவிர யாரும் கலந்து கொள்ள அனுமதியில்லை. ஒவ்வொரு திருப்பலி நடைபெற்று முடிந்ததும் மக்கள் மேல் தீர்த்தம் தெளிக்கப்படும். ஞாயிறன்று எல்லாத் திருப்பலிகளிலும் இச்சடங்கு நடைபெறும்.

பூசையின் தொடக்கத்தில் குருவும் மக்களும் ஒருவர் ஒருவரை வாழ்த்திய பின், குரு தம் இருக்கை அருகில் மக்கள் பக்கமாய்த் திரும்பி நின்று கொண்டு மக்களுக்கு இச்சடங்கின் பொருள்பற்றி ஒரு சில வார்த்தைகளில் நினைவு படுத்துகிறார். அதைத் தம்மீதும் மக்கள் மீதும் தெளிக்கிறார்.

அப்பொழுது மக்கள் காலத்துக்குப் பொருத்தமான பாடல் ஒன்று பாடுகிறார்கள். தீர்த்தம் தெளித்தபின், குரு தம் இருக்கைக்குத் திரும்பி வந்து பாடல் முடிந்ததும் மக்களைப் பார்த்து கைகுவித்தவராய் ஒரு செபம் சொல்லி முடிக்கிறார்.[27]

இந்துக்கள் விழாக்களை தமிழ் மாதப்படி கூறுகின்றனர். இந்து முஸ்லீம் கிறித்தவர்களின் திருவிழாக்கள் வழிபாட்டு முறைகள் முதலியவை வேறுபட்டு அமைகின்றன. வேளாங்கண்ணியில் செப்டம்பர் மே மாதங்களில் மட்டுமின்றி மற்ற மாதங்களிலும் திருவிழாக் காலமாக கோலாகலமாக இருக்கின்றன.

. . . . .

## அடிக் குறிப்புகள்

1. பேரருள் திரு மோன்சிஞ்ஞோர் மோத்தாவால் அடிகள், வேளாங்கண்ணி திருத்தல வரலாறு, ஒளி நிலையம்-தஞ்சாவூர்- 1981. ப.34

2. மே. நூ. ப.34

3. மே.நூ ப.39

4. நேரில் கேட்டறிந்த செய்தி

5. பேரருள் திரு மோன்சிஞ்ஞோர் மோத்தாவால் அடிகள் வேளாங்கண்ணி திருத்தல வரலாறு. ஒளிநிலையம், தஞ்சாவூர்-1981. ப.36

6. மே.நூ ப.37

7. நேரில் கேட்டறிந்த செய்தி

8. நேரில் கேட்டறிந்த செய்தி

9. பேரருள் திருமோன்சிஞ்ஞோர் மோத்தாவால்அடிகள், வேளாங்கண்ணி திருத்தல வரலாறு, ஒளிநிலையம், தஞ்சாவூர். 1981. ப.35

10. மே.நூ ப. 36

11. மே.நூ ப.97

12. யா.அ.ஞா ர்து. சே.ச திருவழிபாடும், திருவிழாக்களும், வீரமாமுனிவர் கழக வெளியீடு. 1973. ப.27.

13. மே.நூ . பக்-37-38

14. மே.நூ ப. 51

15. பேரருள் திரு மோன்சிஞ்ஞோர் மோத்தாவானந்தநகள் வேளாங்கண்ணி திருத்தல வரலாறு, ஒளி நிலையம் தஞ்சாவூர்-1981. ப.38

16. மே.நூ . ப.98

17. மே.நூ ப.98

18. மே.நூ . ப.98

19. மே.நூ ப.99

20. பா. அ. ஞா ர்த சே.ச திருவழிபாடுகளும் திருவிழாக்களும் வீரமாமுனிவர் கழக வெளியீடு-1973. ப.27

21. மே.நூ பக்-135-136

22. மே.நூ ப.145

23. மே.நூ ப. 146

24. மே.நூ ப. 146

25. மே.நூ ப. 97

26. மே.நூ ப. 97

27. மே.நூ ப. 168

- - - - - - -

# சமூக நல *** அமைப்புகள்

## ச மூ க நல அ மை ப் பு க ள்

நெடுந்தொலைவிலிருந்து வரும் திருப்பயணிகளுக்குத் தேவையான வசதிகள் யாவும் வேளாங்கண்ணி திருத்தலத்தில் செய்து தரப்படுகின்றன. ஏழைகளுக்கு, முதியோர்களுக்கு ஏழைச் சிறுவர்களுக்கு, பிணியாளர்களுக்கு உதவும் அமைப்புகள் இருக்கின்றன.

### தங்கும் அறைகள் :

பேராலய முகப்பின் வலப்புறம் அமைந்துள்ள குருக்கள் இல்லத்தில் கீழ்த்தள அறைகள் திருப்பயணிகள் தங்குவதற்காகப் பயன்படுபவையாகும்.

திருப்பயணிகள் தங்குவதற்கு என்று சிறுமலர் இல்லம், புனிதவளனார் இல்லம், புனித தோமையார் இல்லம், அசிசி குடில்கள் போன்ற பல இல்லங்கள் இருக்கின்றன.

### சிறுமலர் இல்லம் :

திருப்பயணிகளுக்குப் போதிய வசதிகளுடன் கூடிய நல்ல அறைகள் தேவை என்று அறிந்த தஞ்சாவூர் மேதகு ஆயர் பேராலயத்தின் தென்புறம் "சிறுமலர்" இல்லத்தைக் கட்டுவித்தார். 1965-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 2ஆம் நாள் அவரே அந்த இல்லத்தைத் திறந்து வைத்தார். இருக்கைகள், படுக்கைகள், குளியலறை, கழிவிடம் ஆகிய யாவும் ஒவ்வொரு அறையிலும் உண்டு. மேல் தளத்துடன் கூடிய இவ்வில்லத்தில் 16 அறைகள் உள்ளன. அடுப்பு வைத்துச் சமையல் செய்ய விரும்புபவர்களுக்கு இதையடுத்த சமையல் இடம்

ஒன்று உள்ளது. இதன் பின்புறத்தே 15 அறைகள் கொண்ட புனித சின்னப்பர் இல்லம் கட்டப்பட்டுள்ளது.[1]

<u>புனிதவளனார் இல்லம்:</u>

திருவிழாப் பேருந்து நிலையத்தையடுத்த புனிதவளனார் திருப்பயணிகள் இல்லமும் பல வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

<u>புனித தோமையார் இல்லம்:</u>

பேராலய விரிவுச் சாலையின் வட, தென் பகுதிகளில் மாடியுடன் கூடிய புனித தோமையார் பயணிகள் இல்லத்தில் 26 அறைகள் உள்ளன. காட்சிச் சாலையின் கீழ்ப்பகுதியில் 17 அறைகளும் அதற்கு இணையாக வடபுறமுள்ள கட்டிடத்தில் 13 அறைகளும் உள்ளன. குருக்கள் இல்லத்தின் பின்புறமாக 56 அறைகள் இருக்கின்றன. இவை புனித அந்தோனியார் இல்லம் எனப்படும்

ஆண்டுப் பெருவிழாவின் போது ஏறத்தாழ 550 சிறு அறைகள் கட்டித் தரப்படுகின்றன. அங்காங்கே இத்தனை அறைகளுக்கும் குடிநீர், சமையல், மின்விளக்கு முதலிய வசதிகள் யாவும் அளிக்கப்படுகின்றன. குழுவாக வரும் திருப்பயணிகள் தங்குவதற்குப் பெரிய அறைகள் மூன்று ஒதுக்கப்பட்டு உள்ளன.

பேராலயத்திற்குரிய இவ்வில்லங்கள் யாவும் பேராலயத்திற்கு திருப்பயணமாக வரும் எல்லாப் பயணிகளுக்கும் பயன்படும் வகையில் சில விதிமுறைகள் கையாளப்படுகின்றன. எந்நேரமும் திருப்பயணிகளை வரவேற்றுவேண்டிய வசதிகளை அளித்திட பேராலய அலுவலர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். திருப்பயணிகள்

தங்கியிருக்கும் போது அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் இரவில் காவல் காத்திடவும் பேராலயச் சேவையர் உள்ளனர். இங்குள்ள அறைகள் எவருக்கும் முன்பதிவு செய்யப்படுவதில்லை.: திருப்பயணிகள் வந்து சேர்ந்தவுடன் வரிசையாக அவர்களுக்கு வசதியான அறைகள் அளிக்கப்படுகின்றன.

துப்புரவு செய்வதற்காக ஒவ்வொரு பகுதிக்கும் துப்புரவாளர்கள் குறிக்கப்பட்டுள்ளனர். அறைகள் பயணிகளுக்கு அளிக்கப்படு முன்பும் அவர்கள் அவற்றை விட்டுச் சென்றவுடனும் துப்புரவு செய்யப்படும். அறைகளைச் சுற்றிய இடங்களை எல்லாம் துப்புரவாளர்கள் அடிக்கடி துப்புரவு செய்வர். இவர்கள் தங்கள் பணியை முறையாகச் செய்வதைக் கண்காணிக்க மேற்பார்வையாளர் ஒருவர் உள்ளார்.[2]

<u>திருப்பயணிகளுக்கு உணவு வசதி:</u>

பேராலய நிர்வாகத்தால் நடத்தப்படுவது புனித ஆரோக்கிய அன்னை உணவகம் திருப்பயணிகளுக்குச் சேவை செய்வதையே நோக்கமாகக் கொண்ட இவ்வுணவகம் தன்னால் இயன்ற அளவு சுவையான உணவைச் சீரான விலையில் அளித்து வருகிறது. இவ்வுணவு அருந்தகம் பேராலயத்தின் எதிர்புறம் உள்ளது.[3] இங்கு இருபத்தைந்திற்கு மேற்பட்டவர்கள் வேலை செய்கிறார்கள். இங்கு சைவ உணவு, அசைவ உணவு இரண்டும் கிடைக்கும். எல்லா வகையான உணவுகளும் இங்குக் கிடைக்கும். இங்கு வேலை செய்பவர்கள் நீல நிறத்தில் உடை அணிந்திருக்கின்றனர்.

மருத்துவம்:

உடல் நலம் குன்றி நோய்வாய்படும் சேவைப் பணியாளர்களுக்கு மருத்துவ உதவியளிக்க ஆரோக்கிய அன்னை மருத்துவமனை உள்ளது. இது புனித அடைக்கல அன்னையின் கன்னியர் மடத்தின் முன் அமைந்துள்ளது. அம் மடத்தின் கன்னியர் இப்பணியை ஆற்றி வருகின்றனர். நோய்வாய்படும் திருப் பயணிகளுக்கும் மருத்துவ உதவி அளிக்கப்படுகின்றன.[4]

வேண்டுதல் முடி:

புனித சின்னப்பர் கொரிந்து நகரிலிருந்து புறப்பட்டு செங்கிரைத் துறையை அடைந்ததும் அங்கு தான் செய்திருந்த பொருத்தனையின்படி அவர் முடி வெட்டிக் கொண்டதாக அப்போஸ்தலர் பணி /அதி:18:18/ கூறுகிறது. அழகூட்டும் முடியை அர்ப்பணிக்கும் நோக்குடன் திருப்பயணிகள் வேளாங்கண்ணியிலும் அது போல முடி எடுத்துக் கொள்கிறார்கள். இதற்காகப் பேராலயத்தின் அருகில் நேர்ச்சை எடுக்கும் இடங்கள் பேராலயக் கண்காணிப்பில் அமைக்கப்பட்டு செயல்படுகின்றன.[5] நேர்ச்சைக்காகக் காது குத்தலும், தலை முடி எடுத்தலும் அவற்றிற்கெனப் பேராலய கண்காணிப்பாளரால் குறிப்பிட்ட இடத்தில் மட்டுமே செய்யப்பட வேண்டும். கொடி மரத்திற்கு வடக்கேயும் வியாகுல மாதா கோவிலுக்கு அருகே வடக்கே உள்ள கட்டடங்கள் தாம் பேராலய கண்காணிப்பில் உள்ளன. மற்ற இடங்களில் உள்ளவை தனியாரால் பேராலயத்துடன் ஒத்துழையாமல் நடைபெறுபவை.[6]

மாதா எண்ணெய்:

ஆலய காணிக்கைகளையும், மந்திரித்த எண்ணெயையும் பெறுமிடம் குருக்கள் இல்லத்திற்கு முன்புறம் அமைக்கப்பட்டுள்ளது. திருநாட்காலங்களில்

காலை 6 மணியிலிருந்து மாலை 8 மணி வரையிலும், பிற நாட்களில் காலை 6 மணியிலிருந்து பகல் 12 மணி வரையிலும், மாலை 3 மணியிலிருந்து 6 மணி வரையிலும் இது திறந்திருக்கும். காணிக்கை நிலையம் மூடி இருக்கும்போது மந்திரித்த எண்ணெய் குருக்கள் இல்லத்திற்கு முன் உள்ள தகவல் நிலையத்தில் கிடைக்கும்.[7]

<u>காணிக்கை காட்சி சாலை:</u>

ஆரோக்கிய அன்னை செய்துவரும் நலன்களுக்கு நன்றியாக பொருட்களை காணிக்கையளிக்கின்றனர். காணிக்கை காட்சி சாலை முன்பு மரிய சேவைப் புத்தக நிலையத்திற்கு மேல்தளத்தில் இருந்தது. மரிய லூசை அடிகள் அவர்களால் 1971-ஆகஸ்டு மாதம் 23-ஆம் நாளில் தற்பொழுது இருக்குமிடத்தில் மாற்றி வைக்கப்பட்டது.[8] இந்த காணிக்கை காட்சி சாலை மரியாயின் சேனை புத்தக நிலையத்திற்கு அருகில் ஆலயத்திற்கு எதிர்ப்புறம் உள்ளது. காணிக்கை பொருள்களை பார்க்க செல்வதற்கு ஒரு வழியாகவும், பார்த்துவிட்டு வரும் போது மற்றொரு வழியாகவும் வரவேண்டும். காணிக்கைப் பொருள்கள் கண்ணாடியாலான பெட்டிகளில் பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளன. காணிக்கைப் பொருள்களை பார்த்துக் கொண்டு வரும்போது ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்ல தடுப்புக் கம்பி வழிகள் உள்ளன. மேலும் அவை காணிக்கைப் பொருள்களை பார்ப்பவர்கள் வரிசையாக செல்வதற்கும் இவை பயன்படுகின்றன. காணிக்கை காட்சி சாலை மேலும் விரிவு படுத்தப்பட்டு வருகிறது. மாதாவின் புதுமைகளை விளக்கும் நிகழ்ச்சியையும் ஏசுவின் பாடுகளை விளக்கும் நிகழ்ச்சிகளையும், ஒலி, ஒளியின் மூலம் காட்டுவதற்கு என்று ஒலி, ஒளி நிலை அமைப்புக் கூடம் கட்டப்பட்டு வருகின்றது. இந்துக் கோயில்களில் காணிக்கைப் பொருள்களை ஏலம் விடுவதுபோல் இங்கு ஏலம் விடப்படுவதில்லை. அவை பத்திரமாக பாதுகாக்கப்பட்டு வருகின்றன. காணிக்கைப் பொருள்களை ஏலம்

வருடத்திற்கு ஒரு முறை மாற்றிவைப்பதுண்டு.

பேருந்து, புகைவண்டி போக்குவரத்துகள் ஏற்படாத காலங்களில் வெளி நாடுகளில் உள்ளவர்கள் தங்கள் வேண்டுதல்கள் நிறைவேறியதற்கு நன்றியாக காணிக்கைப் பொருள்களை கடலில் விடுகின்றனர். அவை வேளாங்கண்ணி மாதாவிடம் சென்று சேர்ந்துவிடும் என்ற நம்பிக்கையில் அவ்வாறு விடுகின்றனர்.

நகரத்தில் பெயர் பொறித்து தேங்காயுடன் இணைத்து கடலில் விடுகின்றனர். அவ்வாறு கடலில் விடப்பட்ட தேங்காய்கள் காணிக்கை காட்சி சாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலும் மூங்கில் குழியில் நாணயங்களை வைத்து அவற்றை மூடி கடலில் விடப்பட்டவை காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

பாண்டியன் போக்குவரத்து கழக பணியாளர்கள் சிலரால் செய்யப்பட்ட பேருந்து ஒன்றினை காணிக்கையாக வைத்துள்ளனர். எந்த காரணத்திற்காக வைத்தார்கள் என்று தெரியவில்லை.

திரைப்பட நகைச்சுவை நடிகர் நாகேசுக்கு படபிடிப்பின்போது காலில் முறிவு ஏற்பட்டு விட்டது. ஆரோக்கிய மாதாவிடம் வேண்டிக்கொண்டு குணமடைந்ததற்கு காணிக்கையாக வெள்ளியால் செய்யப்பட்டகால் ஒன்றினை நாகேஷ் என்று பெயர் பொறித்து வைக்கப்பட்டுள்ளது.

முதல்வர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் சிறுநீரக அறுவை சிகிச்சைக்காக அமெரிக்காவில் இருந்தபொழுது வேண்டிக் கொண்டு வெள்ளியால் செய்யப்பட்ட முதல்வர் எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்களின் முழு உருவத்தை 3.2.85 அன்று சேலம் மாவட்டம் குமாரபாளையம் சின்னப்ப நாயக்கன் பாளையம் இளைஞர் அணி, மகளிர் அணியினர் காணிக்கையாக வைத்திருக்கின்றனர்.

முதல்வர் எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்கள் உருவத்தை பொன்னால் செய்து எ.தாஸ்-விஜயராணி, இராயபுரம் முன்னாள் அ.இ.அ.தி.மு.க தொகுதி அமைப்பாளர் அவர்கள் வைத்துள்ளார்.

டைரக்டர் தாசரி நாராயணராவ் தன்னுடைய தெலுங்குப் படமான எம்.எல்.ஏ. ஏடு குண்டலு நூறு நாட்கள் ஓடியதற்காக அவருடைய முழு உருவமும் ஸ்டூடியோ அமைப்பும் வைக்கப்பட்டிருக்கின்றன.

காணிக்கை காட்சி சாலையில் பாதுகாப்பாளர்களாக ஒன்பதுபேர் பணியாற்றுகிறார்கள். அவர்கள் பகுதிநேர முறைப்படி வேலை செய்கிறார்கள்.[9]

<u>அன்னைக்கு அளிக்கு காணிக்கைகள்:</u>

பேராலயத்திற்கு வரும் திருப்பயணிகள் தாங்கள் மாதாவுக்கு அளிக்க விரும்பும் காணிக்கைப் பொருட்களைப் பேராலய காணிக்கை நிலையத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். பொன், வெள்ளிக் காணிக்கைகள் மெழுகு வர்த்தி, தென்னம்பிள்ளை முதலியவை சாதாரணமாக அளிக்கும் காணிக்கையாகும். திருப்பலிக்காகப் பெயர்ப்பதிவு செய்ய விரும்புவோர் அதற்கான காணிக்கை பெட்டியில் அளிக்கலாம். வெள்ளிக் காணிக்கைகளையும், பணக்காணிக்கைகளையும், பேராலயத்தில் அளித்திடத் தனித்தனிப் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. பொன் முதலிய விலை உயர்ந்த காணிக்கைகளாயின் ஆரோக்கிய அன்னையின் திருச்சுருபத்தின் முன் வைத்த பின் அவர்களே அவற்றை நேரடியாக பேராலயக் குருவிடம் ஒப்படைப்பர்.[10]

## திருத்தல நினைவுச் சின்னம் :

வேளாங்கண்ணித் திருத்தலம் வந்து திரும்பும் மக்கள் நினைவுச் சின்னமாக திருப்பொருட்களையும், ஞான நூல்களையும் வாங்கிச் செல்வர். அவர்களுக்கு இதைவிடவும் குறைந்த விலையில் கிடைக்கும் பொருட்டு குருக்கள் இல்லத்தின் அடித்தளத்தில் மரியாயின் சேனை புத்தக திருப்பண்ட நிலையம் செயல்பட்டு வருகிறது. அங்கு அதிக நெருக்கமாக இருப்பதால் நூல் விநியோகத்திற்காகவும், கிறிஸ்துவை அறிய விரும்பும் இதர மத நண்பர்களுக்காகவும் ஒளி நிலையம் காட்சி சாலையில் இயங்குகிறது.[11]

## தையல் பயிற்சி பள்ளி :

கோயில் நிர்வாகம் தையல் பயிற்சி பள்ளியினையும் நடத்துகிறது. தையல் பயிற்சி பள்ளியில் 25 பெண்கள் பயிற்சி பெறுகிறார்கள். 7 தையல் மிஷின்கள் இருக்கின்றன. காலை 10 மணி முதல் 12.30 வரையும் மாலை 2.00 மணி முதல் 4.00 மணி வரையும் இயங்குகிறது. ஏழைக் குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு இலவசமாக தையல் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பொழுது பி. வினோலியா என்ற தையல் டீச்சர் பயிற்சி அளிக்கிறார்கள். 10-ஆம் வகுப்பு முடித்தவர்களுக்கு அரசாங்கம் மூலமாக வேலை வாங்கித் தரப்படுகிறது. 8-ஆம் வகுப்பு முடித்தவர்களுக்கு இலவசமாக தையல் இயந்திரம் அளிக்கப்படுகிறது.[12]

## தெரசா அனாதைகள் இல்லம் :

இந்த இல்லத்தில் 55 பேர் அனாதைகள் இருக்கிறார்கள்.

இந்த இல்லத்தை அன்னை தெரசா அவர்கள் திறந்து வைத்தார். இங்கு சிஸ்டர்கள் 5 பேர் இருக்கின்றனர். அவர்கள் தெரசா போன்று உடை அணிந்திருக்கின்றனர். தெரசா இல்லத்திற்கு வேறு எந்த உதவியும் இல்லை. மக்கள் செய்யும் உதவியே இங்குச் சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனாதைகள் இருக்கின்றார்கள். இவர்களுக்கு எல்லா உதவியும் இவர்களே செய்கிறார்கள்.

முதியோர் இல்லம்:

முதியோர் இல்லம் 1955 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 4-ஆம் தேதி எஸ்.எல் கபிரியேல் என்பவரால் தொடங்கப்பட்டது. முதியோர் இல்லத்தில் சுமார் 40 பேர் இருக்கின்றார்கள். திருப்பயணிகள் கொடுக்கும் நன்கொடையாலும், கோயில் வருமானத்தினால் முதியோர் இல்லம் நடத்தப்பட்டு வருகிறது.

உயர்நிலைப்பள்ளி:

உயர்நிலைப் பள்ளியில் 16 ஆசிரியர்கள் பணிபுரிகிறார்கள். 522 மாணவமாணவியர்கள் கல்வி கற்கிறார்கள்.

இவை அனைத்தும் கோயில் நிர்வாகம் வைத்து இயக்குபவைகளாகும்.

இங்கு எந்த நேரத்திலும் மின்விளக்கு அணைவதில்லை. ஏன் என்றால் கோயில் நிர்வாகம் ஜெனரேட்டர் கருவி வைத்திருக்கிறது.

காக்கிச் சட்டை அணிந்த பேராவய சேவையினர் இருக்கின்றனர்.

கடிதம் பணம் செலுத்துதல், வாடகை அறைகள் மற்றும் வேறு விபரங்களை அறிய விரும்புகிறவர்கள் குருக்கள் இல்லத்திற்கு கீழே முன்புறம் அமைக்கப்பட்டுள்ள தகவல் அறிவிப்பு/ நிலையத்தில் அறிந்து கொள்ளலாம்.[13]

பாதுகாப்பு அலுவலர் ஒருவர் அமர்த்தப்பட்டுள்ளார். தகவல் அறிவிப்பு நிலையத்திற்கருகில் உள்ள அலுவலகத்தில் பயணிகள் தம் புகார்களைச் சொல்லலாம். அங்குள்ள புகார்ப் புத்தகத்தில் அவற்றை பதிவு செய்ய வேண்டும்.[14]

## வேளாங்கண்ணி குரலொலி

ஆரோக்கிய அன்னையின் புகழ் பரப்பும் மாத இதழ் ஒன்று ஆங்கிலத்திலும், தமிழிலும் வெளியிடப்படுகிறது. வேளாங்கண்ணிக் குரலொலியின் முதல் இதழ் 1953-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் வெளிவந்தது.[15] அதன் முதல் ஆசிரியர் மோன்சிஞ்ஞோர் மொத்தாவாஸ் இப்பொழுது இந்த இதழின் ஆசிரியராக இருப்பவர் அமுதன் அடிகள்.

கோயிலுக்கு சொந்தமாக இருக்கும் நிலம் சுமார் 70 ஏக்கர் நிலம். அதிலிருந்து கோயிலுக்கு அதிக வருமானம் இல்லை. கோயிலுக்கு வரும் காணிக்கைகள் தான் செலவிடப்படுகிறது.

இவ்வகையில் திருப்பயணிகளுக்கும் அனாதை மக்களுக்கும் பயன்படும் வகையில் பல சமூக நல அமைப்புகளை இக்கோயில் நிர்வாகம் நடத்தி வருகிறது.

∴ ∴ ∴ ∴ ∴

## அடிக் குறிப்புகள்

1. பேரருள் திரு மோன்சிஞ்ஞோர் மோத்தாவால் அடிகள் வேளாங்கண்ணி திருத்தல வரலாறு. ஒளி நிலையம் - தஞ்சாவூர் - 1981 ப.86
2. மே.நூ ப.37
3. மே.நூ ப. 88
4. மே. நூ ப.89
5. மே.நூ ப.87
6. மே.நூ ப.92
7. மே.நூ ப.91
8. நேரில் கேட்டறிந்த செய்தி
9. நேரில் கேட்டறிந்த செய்தி
10. பேரருள் ஸ்ரீ மோன்சிஞ்ஞோர் மோத்தாவால் அடிகள். வேளாங்கண்ணி திருத்தல வரலாறு - ஒளி நிலையம் - தஞ்சாவூர் - 1981.ப.88
11. மே.நூ ப.89
12. நேரில் கேட்டறிந்த செய்தி
13. நேரில் கேட்டறிந்த செய்தி
14. பேரருள் திரு மோன்சிஞ்ஞோர் மோத்தாவால்அடிகள் வேளாங்கண்ணி திருத்தல வரலாறு. ஒளிநிலையம் - தஞ்சாவூர் - 1981 ப.93
15. அமுதன் அடிகள் - வேளாங்கண்ணி குரலொலி - 1983 - ப.80

--- --- ---

மு ற் று ம்

-*-*-*-*

## முடிவுரை

-*-*-*-*

வேளாங்கண்ணி கோயில் பற்றிய இத்திட்டக் கட்டுரை ஆறு இயல்களாகப் பகுத்து ஆராயப்பட்டுள்ளது. கோயில் உருவாகிய வரலாற்றில் கோயில் தோற்றம் இன்று வரை அடைந்துள்ள வளர்ச்சி பற்றியும், கோயில் அமைப்பில் கோயில் அமைந்துள்ள இடம் கட்டிட அமைப்பு, சிற்பம் பற்றியும் கோயில் அமைந்துள்ள ஊரின் சிறப்பு என்ற இயலில் ஊர் அமைப்பு, அதன் சிறப்பு பற்றியும், கோயில் முக்கியத்துவம் என்ற இயலில் கோயில் மக்கள் மனத்தில் இடம் பெற்றுள்ள நிலை பற்றியும், திருவிழாக்களும் வழிபாடும் என்ற இயலில் கோயிலில் நடைபெறுகின்ற திருவிழாக்கள் பற்றியும், சமூக நல அமைப்புகள் என்ற இயலில் கோயில் நிறுவனங்கள் மக்களுக்கு உதவுகின்ற நிலைகளும் கூறப்படுகின்றன.

இந்த ஆறு இயல்களில் தொகுக்கப்பட்ட செய்திகளை நோக்கும்போது கீழ் வருகின்ற கருத்துக்கள் என் மனத்தில் எழுகின்றன.

கிறித்தவ கோயில்களில் அரச எழில் மன்றம் என்ற சிறப்பு பெற்ற வேளாங்கண்ணி கோயில் ஒரு கத்தோலிக்க கோயில் ஆரம்பத்தில் கத்தோலிக்க செல்வந்தர் ஒருவரால் கூரை வேய்ந்து சிறு கோயிலாக கட்டப்பட்டு, பின்னர் வந்த போர்த்துக்கீசியரால் சிறந்த கட்டிடமாக கட்டப்பட்டது. இக் கோயில் இன்று கிரேக்க கட்டிடக் கலையின் முறைப்படி அமைந்து அரச எழில் மன்றம் என்ற சிறப்புப் பெற்று விளங்குகிறது. வேளாங்கண்ணி ஒரு காலத்தில் சிற்றூராக இருந்தது இன்று பல வசதிகளும் நிறைந்து புகழ் பெற்று விளங்குவதற்கு இக்கோயில் காரணமாக அமைகிறது. இக்கோயில்

ஒரு கத்தோலிக்க கோயிலாக இருந்தாலும் இங்கு கிறித்தவர்களின் பல்வேறு வகை பிரிவினரும், புறச் சமயத்தவர்களும் வருகை தரும் சிறப்பு மிக்கதாக உள்ளது. எனவே இக்கோயில் சமய பிணைப்புக்கும், சமுதாய பிணைப்புக்கும், பண்பாடு, கலாச்சார ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கும் காரணமாக விளங்குகின்றது. பிச்சை எடுப்பவர்களுக்குந் தேர்தூக்க உரிமை கொடுக்கப்பட்டிருப்பதால் இங்கு நடைபெறும் திருவிழாக்களும் ஏற்றத்தாழ்வுகளை நீக்கும் ஒரு கருவியாக உள்ளது. ஏழை எளியவர்களுக்கு உதவும் சமூக நலப்பணிகளை ஒரு முக்கிய பங்காகக் கொண்டுள்ளது. அரசாங்கத்திற்கு அதிக வருவாயைத் தரும் தலமாக விளங்குகிறது. இவற்றையெல்லாம் நோக்கிக் கோயில் வரலாற்றைப் பார்ப்பதன் மூலம் ஒற்றுமைக்கு வழிவகுக்கும் கோயிலாக விளங்குகிறது. இக்கோயில் மேலும் சமுதாய, சமய ஒற்றுமைகள் ஓங்கி வளர வழி வகுக்கும், மேன்மேலும் வளர்ச்சியுறும் ஒரு கோயிலாக வேளாங்கண்ணி திகழ்கிறது.

## துணை நூற் பட்டியல்

1. செகதீஸ்வரன். எஸ். திருமணிகதிர் - வார இதழ் 10.9.82 கதிர் - 27 ஒளி - 37

2. மோன்சிஞ்ஞோர் மோத்தாவாஸ் அடிகள் - வேளாங்கண்ணி திருத்தலவரலாறு ஒளி நிலையம் - தஞ்சாவூர் - ஆகஸ்ட் - 1981.

3. லூர்து. செ. ச - யா. அ. திருவழிபாடும். திருவிழாக்களும். வீரமாமுனிவர் கழக வெளியீடு - 43 முதற்பதிப்பு அக்டோபர் 1973.

4.


********

# கள ஆய்வு அட்டவணை

| வ.எண் | தேதி | நேரம் | சந்தித்தவர் பெயர் ஊர் | வயது | தொழில் | ஆய்வுசெய்யப்பட்ட விபரம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | 2.2.86 | காலை:11.00 மணி | எஸ்.எஸ். கபிரியேல் வேளாங்கண்ணி | 45 | வேளாங்கண்ணி ஆலய பங்கு குரு | கோயில்பற்றிய விபரம் |
| 2. | 10.2.86 | மாலை: 4.00 மணி | திருமதி ஆண்டாள் அவர்கள் தஞ்சாவூர் | 35 | தமிழ்ப்பேராசிரியை | ஆய்வு பற்றிய விபரம் |
| 3. | 21.2.86 | மாலை: 5.00 மணி | உபகாரி வேளாங்கண்ணி | 40 | கோயில்பணியாளர் | சமூகநல அமைப்பு பற்றிய விபரம் |
| 4. | 22.2.86 | காலை:11.00 மணி | ஜமலி [illegible] வேளாங்கண்ணி | 35 | தெரசா இல்லம் | தெரசா இல்லம் பற்றிய விபரம். |
| 5. | 23.2.86 | காலை:10.00 மணி | எஸ். அருள்தாஸ் வேளாங்கண்ணி | 28 | அருங்காட்சியகம் காப்பாளர் | அருங்காட்சியகம்பற்றிய விபரம். |
| 6. | 24.2.86 | காலை:11.00 மணி | பி.விஜோலியா வேளாங்கண்ணி | 35 | தையல் வகுப்பு ஆசிரியை | தையல் வகுப்பு பற்றிய விபரம். |
| 7. | 24.2.86 | காலை:10.00 மணி | சந்தனமேரி வேளாங்கண்ணி | 35 | கோயில் பணியாளர் | ஊர் பற்றிய விபரம். |
| 8. | 25.2.86 | மாலை: 3.00 மணி | கில்பர்ட் | 23 | ஆசிரியர் | கோயில் சிற்பம்பற்றிய விபரம் |

# வேளாங்கண்ணி



# திருத்தல வரலாறு



பால் சுமந்த சிறுவனுக்கு
மாதா காட்சி

மாதா கேட் [illegible] பால் பால்
இல்லையென்று [illegible] கொடுக்கவே
கேட்டாள்



## முடவனுக்கு நடைகொடுத்த மாதா!

மோர் கேட்டு வாங்கிக்கொண்டு நடக்கும் வரம் அருளிய அன்னையின் செயலை என்னென்பது!



**பேராலய உட்புறம்.**

பேராலயத்துள் நுழையும் பொழுதே
நம் உள்ளத்தைக் கொள்ளும்
மாதா சுரூபமும், பெரிய பீடமும்



**இதய நலம் ஏந்தி வந்த காணிக்கைகள்**

உயிர் பிரிந்துவிடும். இதோ நின்று விட்டது என்றெல்லாம் எண்ணப் பட்டவர் இதோ புத்துயிர் பெற்றுச் செல்லும் காட்சியே இதயங்களின் காணிக்கை.


வேளாங்கண்ணி விளக்கப் படம்
N
MAIN ROAD
SHOPS
SEA
SHOPS

# வேளாங்கண்ணி விளக்கப் படம்

1. மாதா குளம்
2. மாடங்கள்
3. புனித சூசையப்பர் பயணிகள் இல்லம்
4. புனித ஆரோக்கிய அன்னை உயர்நிலைப்பள்ளி
5. காவல் நிலையம்
6. அஞ்சலகம்
7. இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
8. புனித சூசையப்பர் முதியோர் இல்லம்
9. புனித சூசையப்பர் முதியோர் இல்லம்.
10. தொன்போஸ்கோ சிறுமியர் இல்லம்
11. புனித அடைக்கல மாதா மடம்
12. புனித ஆரோக்கிய மாதா மருந்தகம்.
13. மின்பொறி அறை
14. தொன்போஸ்கோ சிறுவர் இல்லம்.
15. பயணிகள் மன்றம்
16. குழந்தை இயேசு பாலர் இல்லம்.
17. இளைஞர் மன்றம் இல்லம்
18. புனித தோமையார் இல்லம்.
19. புனித தோமையார் இல்லம்.
20. திருத்தல பேராலயம்
21. புனித இராயப்பர் பயணிகள் இல்லம்.
22. புனித இராயப்பர் பயணிகள் இல்லம்.

23. சிறுவர்ப் பயணிகள் இல்லம்.

24. பயணிகள் மரிதம்.

25. குருக்கள் இல்லம்.

ஏ. கூலி வாடகை அறை வழங்குமிடம் தகவல் நிலையம்
பி. காணிக்கைப் பொருள்கள் வழங்குமிடம்
சி. மரியாயின் சேனை பக்திப் பொருட்கள் கிடைக்குமிடம்.

26 காணிக்கைப் பொருட்களின் காட்சிசாலை ஒலி நிலையம்

27. உணவு அருந்தகம்

28. புனித அந்தோனியார் பயணிகள் இல்லம்.

29. கோயில் முடியெடுக்கும் இடம் காது குத்தும் இடம்

30. அன்னை அங்காடி

31. அன்னை அங்காடி

32. வியாகுல மாதா கோயில்

33. காய்கறி மார்க்கெட்

34. ஊராட்சி மருந்தகம்.

35. பேருந்து நிலையம்

36. பயணிகள் பேருந்து நிற்குமிடம்.

-:-:-